



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 166 சுபகிருது வருடம், தை மாதம் 26ஆம் திகதி வியாழக்கிழமை
(09.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 17, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50




## உஷ்

சஜித் பிரேமதாச பதவிக்கு வந்தால் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக அமெரிக்க, பிரிட்டன் தூதுவர்மார் கூறியதாக முன்னாள் எம்.பி. சுஜீவ சேனசிங்க, சஜித் பிரேமதாசவை வைத்துக்கொண்டே மேடையொன்றில் கூறியமை மேற்படி தூதுவர்களுக்கு பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

அரசியல் கட்சி ஒன்றுடனான சந்திப்பின்போது இந்த விடயத்தை பிரஸ்தாபித்த அமெரிக்கத் தூதுவர், சுஜீவ சேனசிங்க என்ற நபரை தாம் கண்டதும் இல்லை பேசியதும் இல்லை என்று கூறினாராம்.

சுஜீவவின் வருகையும் அவரது பேச்சும் கட்சிக்கு பெரும் பின்னடைவை தருமென்று அந்தக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் சஜித்தின் காதுகளுக்கு தகவல் அனுப்பியுள்ளாராம்.



# ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

- பொலிஸ் அதிகாரங்களில் மாற்றங்கள் இல்லை
- இனப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வே எனது கனவு
- வடக்கின் அபிவிருத்திக்குப் புறம்பான திட்டம்
- மலையக மக்களின் பொருளாதார சமூக உரிமைகளுக்கு நடவடிக்கை
- முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பாக அவதானம்
- பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்க விழுமியத்துக்கு சட்டமூலம்

04,06,07 பக்கங்கள்



படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே

## 13ஆவது திருத்தத்தின் பிரதி பிக்குகளால் தீயிட்டு அழிப்பு

நா. தினுஷா

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் நேற்று (08) ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்துக்கு எதிராக கொழும்பில் அணிதிரண்ட மகாசங்கத்தினரால் நேற்று 13ஆவது அரசியலமைப்பு...

» 02 பக்கம்

## அத்தியாவசிய செலவுகளுக்கு மாத்திரமே நிதி ஒதுக்கீடு

### ஜனாதிபதி ரணில் திறைசேரிக்குப் பணிப்பு

அரச வருமான நிலைமை மேம்படும் வரை அரச சேவையைப் பேணுவதற்கு அத்தியாவசிய அரச செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மாத்திரம் வழங்குமாறு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திறைசேரி செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். முன்னர் மேற்கொள்ளப்பட்டதுபோன்று அரசாங்க நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு, மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை...

» 02 பக்கம்

## உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது

### மகாசங்கத்தினர் சமய செயற்பாடுகளில் மாத்திரம் ஈடுபடவேண்டுமென்கிறார் சி.வி.

நா. தினுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாடு தொடர்பான தூரநோக்கு சிந்தனைகள் வரவேற்கத்தக்கதாகும். அவரின் அக்கிராசன உரையும் வரவேற்கத்தக்கதாகும். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தமிழ் மக்களுக்கு கொடுக்கப்படவேண்டிய ஒன்றாகும். மகா சங்கத்தினர் எதிர்க்கிறார்கள் என்பதற்காக உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாது. அரசியலமைப்பு...

» 02 பக்கம்

## ரணிலின் உரைக்கு 05 கட்சிகள் எதிர்ப்பு

### சபையில் கோஷமிட்டபடி வெளியேறினர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேற்றைய அக்கிராசன உரையை ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐந்து கட்சிகள் புறக்கணித்திருந்தன.

விமல் வீரவங்ச தலைமையிலான உத்தர சபை, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் முன்னணி ஆகியனவும் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்திருந்தன. அக்கிராசன உரை நிகழ்த்துவதற்காக...

» 02 பக்கம்

## ஜனாதிபதி ரணிலின் உரையை எதிரணியிலிருந்து வரவேற்கிறோம்



### மலையக மக்கள் குறித்துப் பேசியதை சுட்டிக்காட்டி மனோ எம்.பி. தெரிவிப்பு

மலையக மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் மலையக மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை நடத்த விரும்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பதை நாம் எதிரணியில் இருந்தபடி வரவேற்கிறோம். நீண்டகாலமாக இந்திய வம்சாவளி மலையக மக்களின்...

» 02 பக்கம்

## 13 அமுலில் உள்ளது

### அமைச்சர் பிரசன்ன கூறுகிறார்

நாட்டில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அமுலில் உள்ளதாகவும் புதிதாக நடைமுறைப்படுத்தவேண்டிய...

» 02 பக்கம்



படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்

## அரசுக்கு எதிரான போராட்டத்தால் அத்தியாவசிய சேவைகள் முடங்கின

### கொழும்பிலும் பேரணிகளால் இயல்புநிலை பாதிப்பு

நா. தினுஷா

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பிலான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்...

» 02 பக்கம்

## துருக்கி, சிரியாவில் தொடரும் சோகம் மீட்புப் பணிகளில் 70 நாடுகள்

12 பக்கம்

## நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் இருவர் நியமனம்

### அரசியலமைப்புப் பேரவை அனுமதி வழங்கியது


அரசியலமைப்புப் பேரவை அதன் தலைவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் (07) பாராளுமன்றத்தில் கூடியது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத அங்கத்தவர்களான கலாநிதி பிரதாப் இராமானுஜம், கலாநிதி தில்குஷி அனுல விஜேசுந்தர, கலாநிதி தினேஷா சமரரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

» 02 பக்கம்

### பெருந்தொகை பணம் மீட்கப்பட்ட விவகாரம்

## கோட்டாவிடம் சி.ஐ.டி. வாக்குமூலம் பதிவு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது போராட்டக்காரர்களால் ஜனாதிபதி மாளிகையில் மீட்கப்பட்ட 17.85 மில்லியன் ரூபா பணம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர்.

கோட்டாபயவிடம் சுமார் மூன்று மணிநேரம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்...

» 02 பக்கம்

## உலக சாதனை படைக்கத் தயாராகும் ஜனாதிபதி

### அக்கிராசன உரை தொடர்பில் விமல் எம்.பி. பரிகாசம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்தில் அதிகளவு அக்கிராசன உரைகளை நிகழ்த்தி உலக சாதனை படைக்க முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க அக்கிராசன உரை நிகழ்த்துவதற்காக பாராளுமன்றத்துக்கு வருகைதந்தபோது வெளிநடப்பு செய்த விமல் தலைமையிலான அணியினர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டனர்.

» 02 பக்கம்

## 13 அமுலில்...

அவசியம் இல்லையெனவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுவிட்டது. அதனை தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரியவும் ஏற்றுக்கொண்டுள்ளார். அந்தச் சட்டத்தைப் பற்றி இனிமேலும் கதைப்பதில் அர்த்தமில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியானது நாட்டு மக்களை கொலைசெய்து அழித்த கட்சியாகும். நாம் அஹிம்சைவாதிகள்.

அநுர குமார திசாநாயக்க இப்போதும் ஜனாதிபதியைப் போல உடையணிந்துகொண்டிருக்கிறார். அவர் நடமாடுவதும் பேசுவதும் தன்னை ஜனாதிபதியென நினைத்துக்கொண்டுதான்.

அவரால் ஒருபோதும் ஜனாதிபதியாக முடியாது. அதனால் அவர் கனவிலேயே இருக்கட்டும். நாட்டு மக்களை மக்கள் விடுதலை முன்னணியினரே திசைதிருப்புகிறார்கள் என்றார்.

## பெருந்தொகை பணம்...

நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டு ஜூலை 09ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற பாரிய போராட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்டது. அதன்போது பெருந்தொகை பணம் போராட்டக்காரர்களால் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் கோட்டாபய ராஜபக்‌ஷவிடம் வாக்குமூலம் பதிவுசெய்யுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது திருத்தத்தின்...

திருத்தச் சட்டத்தின் பிரதியொன்று தீயிட்டு எரிக்கப்பட்டது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு எதிரான பிக்குகள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்ட பேரணியின்போதே இவ்வாறு தீ வைக்கப்பட்டது.

பொல்துவ சந்தியில் பிக்குகளால் பிரித் பாராயணம் ஓதப்பட்டு, மிகிந்தலை ரஜமகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி தம்மரத்ன தேரரினால் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரதி தீயிடப்பட்டது.

## ரணிலின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கு வருகைதந்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் "ராஜாசன மேனியாவ" என்று கூக்குரலிட்டனர். அதன் பின்னர் ஜனாதிபதி அக்கிராசனத்தில் அமர்வதற்கு முன்பாக அவர்கள் சபையிலிருந்து வெளியேறினர்.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜனாதிபதியின் அக்கிராசன உரையை புறக்கணிப்பதாக அறிவித்திருந்த போதிலும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மனோ கணேசன், வே.இராதாகிருஷ்ணன், எம். உதயகுமார் ஆகியோர் சபையில் இருந்தனர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் சபைக்கு வருகைதந்திருந்தனர்.

## உரிமைகளை..

திருத்தத்துக்கும் மகா சங்கத்தினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆகவே, இந்தப் பிரச்சினைகளில் தலையிடாமல் மகாசங்கத்தினர் அவர்களின் சமய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்ற ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைத் திட்டங்களை வரவேற்கிறோம். ஆனால், அவற்றை எந்தளவு தூரம் நிறைவேற்றுகிறார்கள் என்பதே பிரச்சினை. அதுதொடர்பிலேயே கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துவது என்பது சிறந்த தீர்மானமாகும். இருந்தபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இது தீர்வைத் தராது. அதாவது, ஐக்கிய அரசொன்று இருக்கும்போது அநேகமாக பெரும்பான்மை மக்களின் விடயங்களுக்கே முதலிடம் வழங்கப்படும். சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சிக்கல் நிலை ஏற்படும். அதன்காரணமாகவே சமஷ்டி முறையை நாங்கள் கோருகிறோம்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வரவேற்புக்குரியவை. வாக்குறுதி வழங்கிய அநேகமான விடயங்களை பகுதியளவில் நிறைவேற்றிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். மீதமுள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனாலும் மாகாண சபைத் தேர்தல் குறித்து எதுவும் பேசவில்லை. எப்போது அதனை செய்யப்போகிறார்கள் என்பது புரியவில்லை. தேர்தல் தொடர்பில் எந்த வாக்குறுதிகளும் வழங்கப்படவில்லை.

ஆனாலும் ஜனாதிபதியின் நோக்கம் சிறந்ததாகும். அது தெளிவாக தெரிகிறது. நாடு எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் அவருக்கு இருக்கும் சிறந்த தூரநோக்கின் காரணமாகவே அவரை ஆதரிக்கிறேன்.

மகா சங்கத்தினரே 1958ஆம் ஆண்டு இந்த வாய்ப்புகளை இல்லாமல் செய்தார்கள்.

பண்டாரநாயக்கவும் ஒரு சட்டமொன்றை கொண்டு வந்திருந்தார். அதற்கும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்கள். 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் மகா சங்கத்தினர் தலையிடுவது என்பது சிறந்ததல்ல. அவர்களால் மாத்திரமே நாட்டை பாதுகாக்க முடியும். சிறந்த தீர்மானங்களை பெற்றுக்கொடுக்க முடியுமென்று அவர்கள் கருதுகிறார்கள். அவர்களுக்கு எதுவும் தெரியாது. சிங்களம் மற்றும் பாளி மொழிகளை மாத்திரம் கற்றுக்கொண்டு அதனூடாக நாட்டின் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்ற நிலைப்பாடும் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து விகாரைகளுக்குச் சென்று அவர்களின் சமயம் சார்ந்த கடமைகளை செய்ய வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும். மகாநாயக்க தேரர்களுக்கு இன்னும் ஓரிரு தினங்களில் பகிரங்க கடிதமொன்றை எழுதவும் எதிர்பார்த்திருக்கிறேன்.

அரசாங்கம் வாக்குறுதிகள் வழங்கியிருப்பது உண்மையாக இருந்தாலும் எதிர்காலத்தில் என்னவாகும் என்பதே பிரச்சினையாகும். காலங்காலமாக இதுவே இடம்பெற்றிருக்கிறது.

இவை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டியவையாகும். மகா சங்கத்தினர்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாது. மகா சங்கத்தினர் நாட்டில் ஆட்சிசெய்பவர்கள் இல்லை. ஒவ்வொருவரினதும் நிலைப்பாடுகளுக்காக தீர்மானங்களை மாற்றிக்கொள்ள முடியாது என்றார்.

## உலக சாதனை..

இதன்போதே விமல் வீரவங்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 10 கோடி ரூபா செலவில் நடத்தப்படும் கடந்த காலங்களில் சுதந்திர தின விழாவுக்கு இம்முறை 40 கோடி ரூபாவுக்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளது.

விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே இம்முறை 40 கோடி ரூபா செலவானதாக அரசாங்கத்தின் அதிகார தரப்பினர் கூறுகின்றனர். இதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கை செலவு எந்தளவுக்கு அதிகரித்துள்ளது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்கள் ஆணையில்லாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மிக குறுகிய காலத்தில் அதிகளவான அக்கிராசன உரைகளை நிகழ்த்தும் உலக சாதனை படைக்கப் போகிறார்.

பாராளுமன்றம் என்பது ஜனாதிபதி அக்கிராசன உரை தொடர்பான கனவுகளை நிறைவேற்றும் இடமல்ல. பொது பணத்தை செலவிட்டு அவற்றை செய்துகொண்டிருக்க இடமளிக்கத் தேவையில்லை.

இதன் காரணமாக சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் என்ற வகையில் செங்கோல் எடுத்துவரும் போது அதற்கு மரியாதை செலுத்தி விட்டு, ஜனாதிபதி உரையாற்ற சென்றபோது, நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவையில் இருந்து வெளிநடப்பும் செய்தோம் என்றார்.

## நீதிச் சேவை...

அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர்களான கபிர் ஹஷீம் மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் தவிர்க்க முடியாத காரணத்தினால் இதில் கலந்துகொள்ள முடியாது என அறிவித்திருந்தனர். நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக உயர் நீதிமன்ற நீதியரசர்களான புவனேக அலுவிகாரவை மீண்டும் நியமிப்பதற்கும், ஈ.ஏ.ஜீ.ஆர் அமரசேகரவைப் புதிதாக நியமிப்பதற்கும் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரை அரசியலமைப்புப் பேரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

அத்துடன், அரசியலமைப்பின் 41 ஆ பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்கு அரசியலமைப்புப் பேரவை தீர்மானித்திருப்பதுடன், இவ்வார இறுதி பத்திரிகைகளில் இதற்கான பிரசாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், இதற்கமைய கடந்த முறை பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களை இவ்வார இறுதிப் பத்திரிகைகளில் மீண்டும் மீள்பிரசுரம் செய்வதற்கும் தீர்மானித்தது. விண்ணப்பம் குறித்த மாதிரிப் படிவம் பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி முன்னர் தீர்மானிக்கப்பட்டது போன்று 2023 பெப்ரவரி 15ஆம் திகதியாகத் தொடர்ந்தும் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசுக்கு எதிரான...

தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று(08) கொழும்பின் பல்வேறு பாகங்களில் மகா சங்கத்தினர் மற்றும் அரச, தனியார் நிறுவனங்களின் தொழிற்சங்கங்களினால் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை, நேற்று நாடு முழுவதுமுள்ள மருத்துவமனைகளில் 24 மணிநேர வேலைநிறுத்தப் போராட்டமும் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் நோயாளர்கள் பெரும் அசௌகரியத்தை சந்தித்திருந்தார்கள்.

அரச நிறுவனங்களில் முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக பெருமளவான அரச சேவைகள ஸ்தம்பித்தன.

இதேவேளை, கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு ஆர்ப்பாட்டங்களின் காரணமாக கொழும்பின் பிரதான வீதிகளில் நேற்று கடும் வாகன நெரிசலை அவதானிக்கக் கூடியதாக இருந்ததுடன் ஆர்ப்பாட்டங்களை தடுப்பதற்காக ஒவ்வொரு பகுதிகளிலும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தார்கள்.

இந்நிலையில், எதிர்வரும் 17ஆம் திகதி வரை இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை இடைநிறுத்துவதாகவும், 17ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்தின் வரிக்கொள்கை திருத்தி அமைக்கப்படாவிட்டால் தொடர் வேலைநிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் நேற்று அரசாங்கத்துக்கு எச்சரிக்கையும் விடுத்திருந்தன.

### தடையையும் மீறி மகா சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு எதிரான பிக்குகள் ஒன்றியம் உள்ளிட்ட மகா சங்கத்தினரின் நேற்றைய பேரணி, கோட்டை பெரகும்பா பிரிவெனாவுக்கு அருகிலிருந்து ஆரம்பமாகி பாராளுமன்றத்தை நோக்கி பயணித்தது.

இந்தப் பேரணி ஆரம்பித்தது முதல் பொல்துவ சந்திக்குச் செல்லும் வீதியின் இடைநடுவில் மகாசங்கத்தினருக்கு பொலிஸார் மூன்று இடங்களில் வீதித் தடைகளை விதித்திருந்தனர். ஆனாலும் மகா சங்கத்தினர் அந்தத் தடைகளையும் மீறி பாராளுமன்றத்தை நோக்கி பயணித்திருந்தனர்.

இந்நிலையில், தியத உயணவினூடாக பாராளுமன்றத்துக்குச் செல்லும் பொல்துவ சந்திக்கு அருகில் பெருந்திரளான பொலிஸார் பேரணியை தடுப்பதற்காக குவிக்கப்பட்டிருந்தனர். பொல்துவ சந்தியினூடாக பாராளுமன்றக் கட்டடத்தொகுதிக்கு செல்லும் வீதிக்கு பயணிப்பதை தடுத்து கொழும்பு மேலதிக நீதவானினால் பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவின் அடிப்படையிலேயே பொலிஸார் இவ்வாறு தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன் பேரணியை தடுத்து, கலையச் செய்வதற்கு பொலிஸார் தொடர் முயற்சிகளை எடுத்திருந்தனர்.

அதனையும் மீறி மகா சங்கத்தினர் பாராளுமன்றத்தை நோக்கிச் செல்ல முயற்சித்ததால் பொலிஸாருக்கும் மகாசங்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தினால் இரு தரப்பினருக்கும் இடையில் முருகல் நிலை ஏற்பட்டது. பேரணியில் பங்குபற்றிய பிக்குகள் சிலர் உடல் உபாதைகளுக்கும் உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, பலாங்கொட கஸ்ஸப தேரர் பாராளுமன்றத்துக்கு நுழையும் வீதியை மறித்து சத்தியாக்கிரகம் செய்திருந்த நிலையில் அவரை அங்கிருந்து வெளியேற்ற பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தார்கள்.

மகா சங்கத்தினர் பொலிஸாருடன் நீண்ட நேரம் போராடியும் பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததால் அதனை மீறி அவர்களால் பாராளுமன்ற வீதிக்குள் நுழைய முடியாத நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் வீதியிலேயே அமர்ந்து தமது எதிர்ப்புகளை தெரிவித்து கோசம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திருந்தார்கள். இந்நிலையில் நேற்று காலை முதல் அந்த வீதியில் கடும் போக்குவரத்து நெரிசலையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

### அணிதிரண்ட அரச ஊழியர்கள்

இதனை தொடர்ந்து, அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து துறைமுக அதிகாரசபை, எரிபொருள் கூட்டுத்தாபனம், மின்சாரசபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகிய நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று மதியம் 12 மணியளவில் கோட்டை பிரதான புகையிரத நிலையத்தின் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினை தடுப்பதற்காகவும் பெருந்திரளான பொலிஸார் மற்றும் இராணுவ படையினர் கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக குவிக்கப்பட்டிருந்தார்கள். நீர்த்தாரை பிரயோகிப்பதற்கான பொலிஸ் வாகனங்களும் ஆர்ப்பாட்டக்களத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இதன்போதும் பொலிஸாருக்கும் துறைமுக அதிகார சபை ஊழியர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. பெருந்திரளான ஊழியர்கள் புகையிரத நிலையத்துக்கு முன்பான வீதியை முழுவதும் மறித்ததால் கொழும்பின் பிரதான வீதிகளின் போக்குவரத்து நடவடிக்கைகள் ஸ்தம்பித்திருந்ததுடன் ஒரு மணி நேரத்துக்கும் மேல் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வரிக்கொள்கையை திருத்துமாறும் அரசாங்கத்தின் வரிக் கொள்கையின் காரணமாக தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கோசம் எழுப்பியிருந்தார்கள். ஒரு மணிநேர ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கலைந்து செல்ல தீர்மானித்த ஆர்ப்பாட்டக்கார்கள், 17ஆம் திகதியுடன் உயர்தரப் பரீட்சை நிறைவுக்கு வருகிறது. அதுவரைக்கும் ரணில் - ராஜபக்‌ஷக்கள் அரசாங்கத்துக்கு காலக்கெடு கொடுக்கிறோம். அதற்குள் தீர்வு கிடைக்காவிட்டால், 17ஆம் திகதியிலிருந்து எங்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். எனவே, உடனடியாக வரி திருத்தக் கொள்கையை அரசாங்கம் நீக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் வைத்தியர்கள் முதல் அனைத்து அரச ஊழியர்களும் வீதிக்கு இறங்குவார்கள் என்று அரசாங்கத்தை எச்சரிப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

இதேவேளை, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட அரச மற்றும் அரச சார்பற்ற தொழிற்சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்புப் பேரணியொன்று கொழும்பு, ஹைய்ட் பார்க்கில் நேற்று மாலை இடம்பெற்றது. அடக்குமுறை வரி திருத்தத்தை இரத்து செய்க என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் பெருந்திரளான தொழிற்சங்க உறுப்பினர்களும் ஊழியர்களும் கலந்துகொண்டிருந்தார்கள்.

இந்தப் பேரணி ஆரம்பம் மாத்திரமே. மக்களை கஷ்டத்துக்குள்ளாக்குவது எங்களின் நிலைப்பாடு இல்லை. அரசாங்கத்துடனே எங்களின் எதிர்ப்பு இருக்கிறது. எங்களின் பொறுமையை சோதிக்கிறார்கள். எங்களால் முடிந்த அனைத்து அர்ப்பணிப்புகளையும் செய்கிறோம். ஆனால், அரசாங்கம் எங்களின் செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்துவதில்லை என்றும் சுட்டிக்காட்டியிருந்தனர். விரைவில் இந்த வரிப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் தொடர் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவும் தயாராக இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

### அரச ஊழியர்கள், வைத்தியர்கள் வேலை நிறுத்தம்

இந்நிலையில் அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஊழியர்கள் நேற்று தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். மின்சார சபையின் ஊழியர்கள் நேற்று மின்சார சபைக்கு முன்பாகவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்ததுடன் கொழும்பு தேசிய மருத்துவமனை ஊழியர்களும் வீதிக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த வேலை நிறுத்தமானது நாடு பூராகவும் இருக்கும் அரச நிறுவனங்களிலும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நேற்று காலை 8.00 மணிமுதல் இன்று காலை 8.00 மணிவரை தொடர் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய அனைத்து சிகிச்சைப்பிரிவுகளும் நேற்று முடங்கியிருந்ததுடன் மருத்துவமனைகளுக்கு வந்த நோயாளர்கள் நேற்று சிகிச்சைகள் எதுவுமின்றி மீண்டும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஜனாதிபதி ரணிலின்...

அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகள் பற்றி நமது மக்கள் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனியாக பேச வேண்டும் என நான் வலியுறுத்தி வந்துள்ளேன். அதன்மூலம் இந்நாட்டின் முழுமையான குடிமக்களாக மலையக தமிழ் மக்களும் வாழும் நிலை ஏற்பட வேண்டும் என நாம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் எதிர்பார்க்கிறோம்.

இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பில் இருந்து வெளிப்பட்டிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறோம். இனி இதை உரையுடன் நிறுத்தி விடாமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறையில் செய்து காட்டவேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

எட்டாம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை பிரகடன உரை தினத்தன்று நாம், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் சபையில் பிரசன்னமாகி இருந்தோம். எம்முடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய எதிரணிக் கட்சிகளின் எம்.பிக்களும் சபையில் பிரசன்னமாகி இருந்தோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையை நேரடியாக எதிர்கொள்ளவே நாம் பாராளுமன்றத்துக்கு சென்றிருந்தோம். ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை. பாராளுமன்றத்துக்கு செல்லாமல் உரையை பகிஷ்கரிப்பது என்ற ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவு எம்முடன் சேர்ந்து எடுக்கப்படவில்லை. ஆகவே அதுபற்றி எமக்கு தெரியாது. எதிர்வரும் தினங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முழுமையான உரை தொடர்பாக எமது கருத்துகளை நாம் பாராளுமன்றத்தில் வெளியிடுவோம். அதேவேளை, மலையக மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் மலையக மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்த விரும்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி இருப்பதை நாம் எதிரணியில் இருந்தபடி வரவேற்கிறோம். இதை உரையுடன் நிறுத்தி விடாமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறையில் செய்து காட்டவேண்டும்.

## அத்தியாவசிய...

வழங்குவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் தடையாக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அமைச்சரவைக்கு இது குறித்து அறிவித்தார்.

இதன்படி, சம்பளம் வழங்குதல், கடன் சேவைகள், ஓய்வூதியம், வைத்தியசாலை மருத்துவ சேவைகள், மாதாந்த சமுர்த்தி மானியங்கள், முதியோர்களுக்கான நிதியுதவி, ஊனமுற்ற குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிதியுதவி, சிறுநீரக நோயாளிகளுக்கு நிதியுதவி வழங்குதல், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட நிதி உதவி என்பவற்றுக்கு மாத்திரமே நிதியை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், தரம் 05 புலமைப்பரிசில் கொடுப்பனவு, மஹபொல உதவித்தொகை, திரிபோஷ வேலைத்திட்டம், உழவர் ஓய்வூதியம், பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்குத் திட்டம், இராணுவம் மற்றும் ஊனமுற்ற இராணுவத்தினருக்கான கொடுப்பனவு, இராணுவ வீரர்களின் பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவு, ஒத்திவைக்க முடியாத மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் அத்தியாவசிய தொலைத்தொடர்பு சேவைகள், மருத்துவமனைகள், சிறைச்சாலைகள், இராணுவத்தினருக்கு உணவு வழங்கல், பராமரிப்பு சேவைகள், கட்டிட வாடகை, துப்புரவு சேவைகள், பாதுகாப்பு சேவைகளுக்கான ஒப்பந்தக் கொடுப்பனவுகள், ஊழியர் சேமலாப நிதி போன்ற சட்டப்பூர்வ கொடுப்பனவுகள் மற்றும் உர மானியம் வழங்கல் போன்ற நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையையடுத்து புதிய வரி திருத்தத்துடன் கூடிய சுற்றறிக்கையை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நேற்று வெளியிட்டது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.02.07
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5024
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,272,363.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 3 9 6 4 1 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3266
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,417,865.60
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 03 54 55 71

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1479
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,274,523.60
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 1 4 2 9 2 6

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1054
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,463,234.80
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 29 36 51 66

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 333
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,592,282.60
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 01 46 51 55
விசேட இலக்கினம் துலாம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1372
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 298,484,126.00
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 03 13 32 41
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

# 1939இல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறைச்சாலை ஒழுங்குச் சட்டங்களை புதுப்பிக்க நடவடிக்கை




சிறைச்சாலை சட்டங்கள் தற்போதைய தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டுமென நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுக்க வட்டரக்க சிறைச்சாலைக்கு நேற்று (08) விஜயம் மேற்கொண்டு அவதானித்த பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைக்கு அடிமையாகி புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்பட்ட 16-22 வயதுடைய இளைஞர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக வட்டரக்க சிறைச்சாலையில் நிறுவப்பட்டுள்ள சுனீதா வித்தியாலயம், சிறைச்சாலை வைத்தியசாலை மற்றும் சிறைச்சாலை பணி முகாம் ஆகியவற்றின் வசதிகளை அமைச்சர் இதன்போது பார்வையிட்டார்.

சிறைச் சட்டங்கள் தற்போதைய தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும். 1939ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சிறைச்சாலை ஒழுங்கு சட்டங்களை புதுப்பிக்க அறிவுறுத்திய நீதி அமைச்சர், சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய புனர்வாழ்வு சட்டம் கைதிகள் மற்றும் போதைக்கு அடிமையானவர்கள் தொடர்பாக முழுமையான மாற்றத்துடன் செயற்பாட்டுக்கு வருமென்று கூறினார்.

# விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரண நிதியில் 1300 மில்லியன் ரூபா மீளப்பெறப்பட்டுள்ளது

## வங்கிக் கணக்கு இலக்கம் பிழையாக வழங்கப்பட்டதே காரணமென விவசாயத் திணைக்களம் அறிவிப்பு

விவசாயிகளுக்கு நிவாரணமாக அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள பணத்தில் 1300 மில்லியன் ரூபா மீளப்பெறப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாயிகள் தவறான கணக்கு எண்களை கொடுத்ததாலேயே குறித்த பணம் திருப்பி அனுப்பப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒரு ஹெக்டேயருக்கு 10 ஆயிரம் ரூபா மற்றும் இரண்டு ஹெக்டேயருக்கு 20 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் 12 இலட்சம் விவசாய குடும்பங்களுக்கு 8 பில்லியன் ரூபாவை பகிர்ந்தளிக்க விவசாய அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

விவசாயிகளின் கணக்கில் பணத்தை வரவு வைக்கும் முன், விவசாய அபிவிருத்தி நிலையங்களுக்கும் விவசாய சேவை நிலையங்களுக்கும் விவசாயிகளால் கொடுக்கப்பட்டுள்ள கணக்கு எண்கள் சரியாக உள்ளதா என்பதை சரிபார்க்குமாறு விவசாயத் திணைக்களம் அறிவித்திருந்தது.

இருப்பினும், குறித்த பணிப்புக்கமைய அது தொடர்பில் விவசாயிகளை தொடர்பு கொண்டு குறித்த கணக்கு இலக்கங்கள் சரிபார்க்கப்படவில்லை. அதனாலேயே குறித்த பணம் மீளப் பெறப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி மாளிகை போராட்டத்தின்போது மீட்கப்பட்ட 2 கோடி ரூபாவை விடுவிக்க மனு

## கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

'கோட்டா கோ ஹோம்' போராட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகைக்கு சென்ற போராட்டக்காரர்களால் மீட்கப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபா பணத்தை விடுவிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று (08) நிராகரித்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 431ஆவது பிரிவின்படி, பணமோசடி தடுப்புச் சட்டம் மற்றும் இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் இந்தப் பணம் குறித்து விசாரணை நடத்துவது நீதிமன்றத்தின் பொறுப்பாகும்.

இந்த பணம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை எனவும், குறித்த பணத்திற்கு வேறு யாரும் உரிமை கோராவிட்டாலும் பணத்தை விடுவிப்பதற்கான சாத்தியம் இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீரவின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரைக்கு பின்னர் அமைச்சர்களுடன் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட போது...

# மார்ச் 15 ஆம் திகதிக்குள் பாடசாலை சீருடைகளை வழங்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதிக்குள் மாணவர்களுக்கு சீருடை வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர், தேவையான சீருடைகளில் 70 வீதத்தை வழங்குவதற்கு சீன அரசாங்கம் இணங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

பாடசாலை சீருடைகளின் முதல் தொகுதி சீன அரசாங்கத்தால் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

மீதமுள்ள 30 வீத சீருடைகள், உள்ளூர் தனியார் வணிகர்களால் வழங்கப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

# பலாங்கொட கஸ்ஸப தேரர் கைது

பாராளுமன்ற நுழைவாயிலை மறித்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட பலாங்கொட கஸ்ஸப தேரர் உட்பட இருவர் பொலிஸாரால் நேற்று (08) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை நடைபெறும் புதிய பாராளுமன்ற அமர்விற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் வரும் வழியை மறுத்து அவர் அமர்ந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பொலிஸார் தலையிட்டு கஸ்ஸப தேரர் உள்ளிட்ட இருவரை கைதுசெய்தனர்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (08) பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் மகா சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு பொலிஸார் இடையூறு ஏற்படுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

# ஸ்ரீ லங்கா ஜமாத் இஸ்லாம் அமைப்பின் முன்னாள் தலைவர் ஹஜ்ஜுல் அக்பர் விடுதலை



ஸ்ரீலங்கா ஜமாத் இஸ்லாம் அமைப்பின் முன்னாள் தலைவர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பருக்கு எதிராக சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் நேற்று (08) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் தாக்கல்செய்த அடிப்படை உரிமை மீறல் மனு அண்மையில் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவர் மீதான சகல குற்றச்சாட்டுகளையும் வாபஸ் பெறுமாறு பொலிஸ் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்தது. அதன்படி அவர் விடுதலை செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சியங்களின் அடிப்படையில் அவருக்கு எதிராக சில குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் தை மாதம் 26ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** நினைத்த காரியத்தை சாதிப்பீர்கள். நோய், கடன் நிவர்த்தி, எதிரிகள் பணிவாக நடந்து கொள்வார்கள்.

**ரிஷபம்:** உங்கள் மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள்.

**மிதுனம்:** குடும்பத்திலுள்ளவர்களுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உணர்வுகளை வெளிப்படுத்தத் தவிப்பீர்கள்.

**கடகம்:** கும்பிட்டுக் கூத்தாடியாவது உங்கள் காரியங்களைச் சாதிப்பீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள்.

**சிம்மம்:** பேசுவதைவிட மௌனமாக இருப்பதே மேல். கொடுத்த பணம், கொடுத்த வாக்கினை காப்பாற்ற முயற்சிப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத நண்பர் சந்திப்பால் இலாபங்கள் உண்டு. உடல், மனம் இரண்டுமே சிறப்பாக இருக்கும்.

**துலாம்:** செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். தேவையற்ற விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**விருச்சிகம்:** தொழிலில் எதிர்பார்த்த வரப் பிரசாதங்கள் கிடைக்கும். கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும்.

**தனுசு:** தொழில் வியாபாரங்கள் சிறக்கும். சமுகத்தில் உங்கள் கீர்த்தி, செல்வாக்கு உயரும்.

**மகரம்:** நண்பர், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி உண்டு. உங்கள் திட்டங்கள் நிறைவேறும் நாள்.


**கும்பம்:** வீண் பண, பொருள் விரயங்கள் ஏற்படும். கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**மீனம்:** காதல், திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் நினைத்த இலாபத்தினை அடைவீர்கள்.

| | |
|---|---|
| திதி | : சதுர்த்தி முழு நாளும் |
| நட்சத்திரம் | : உத்தரம் இரவு 10.27 வரை பின் அத்தம் |
| யோகம் | : மரண யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை | : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : மு.ப.11.33 – 12.33 மணி வரை |
| ராகு காலம் | : 2.03 – 3.33 மணி வரை |
| எமகண்டம் | : 6.33 – 8.03 மணி வரை |
| குளிகை | : 9.33 – 11.03 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தன அதிர்ஷ்டம் | : பரணி,பூரம்,பூராடம்(பிறந்தவர்களுக்கு) |
| விஷேட தினம் | : சங்கடஹர சதுர்த்தி |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பால் அசௌகரியத்துக்குள்ளான நோயாளிகள்!




நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கு ஆதரவாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் வைத்தியர்கள் நேற்று (08) பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் அங்கு இடம்பெறவில்லை. அதனால் தூரப் பிரதேசங்களில் இருந்து வந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

வெளி மாவட்டங்களில் இருந்து வந்த நோயாளர்களும் சிகிச்சைபெற முடியாத நிலையில் திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# பேரணியில் கலந்துகொண்ட வேலன் சுவாமிக்கு அழைப்பாணை!



"வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி" பேரணியில் கலந்துகொண்டமை, சட்டவிரோதமான பேரணியில் கலந்துகொண்டவர்கள் என குற்றஞ்சாட்டி வேலன் சுவாமிகளுக்கு யாழ்ப்பாண பொலிஸார் அழைப்பாணை விடுத்துள்ளனர்.

சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணி ஆரம்பமானது.

குறித்த பேரணியில் கலந்துகொண்டமை சட்டவிரோதமானதென குறிப்பிட்டு, நேற்று (08) சிவகுரு ஆதீனத்தில் வைத்து வேலன் சுவாமிகளிடம் சிவில் உடையில் வந்தவர்கள் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தி அழைப்பாணையை வழங்கியுள்ளார்.

அதேவேளை குறித்த அழைப்பாணையில், சிவஞானம் சிறிதரன் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக, சட்டவிரோத பேரணியில் கலந்து கொண்டவர்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.




அரசாங்கத்தின் வரி வசூலிப்புத் திட்டத்துக்கு எதிராக துறைமுக அதிகார சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் இணைந்து கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று (08) போராட்டத்தை முன்னெடுத்தன. (படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்



நாட்டில் 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்றத்துக்குச் செல்லும் வழியை மறித்து மகா சங்கத்தினர் பாரிய போராட்டமொன்றை நேற்று (08) முன்னெடுத்தனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, பெப்ரவரி 09ஆம் திகதி, வியாழக்கிழமை**

# தமிழருக்குத் தீர்வா? ரணிலின் பாதுகாப்பா?

''பொருளாதார யுத்தத்தை வெற்றி கொள்வதற்கும் அதன் பின்னர் அபிவிருத்தியடைந்த பொருளாதாரம் ஒன்றை எமது நாட்டில் உருவாக்குவதற்கும் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையும் சமாதானமும் முக்கியமானதாகும்.

ஆர்.சம்பந்தனும் நானும் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டோம். நாம் இருவருக்கும் பொதுவான ஒரு கனவு உண்டு. நாம் இருவரும் பாராளுமன்றத்தில் இருக்கின்றபோதே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்குதல் ஆகும். அக்கனவு பற்றி அன்று முதல் இன்று வரை நாம் கலந்துரையாடுகின்றோம். முயற்சி செய்கின்றோம். முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும், இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்துக்கு இடையில் ஒருங்கிணைப்புப் பணிகளை முறைமைப் படுத்துவதற்காக நவீன முறையில் மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையை தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இவ் அனைத்து சட்டங்கள் மற்றும் வரைவுகளை நாம் பாராளுமன்றத்தின் தேசிய சபைக்கு சமர்ப்பிப்போம். அது தொடர்பாக கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தேசிய சபைக்கு வழங்கப்படும்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகள் தற்பொழுது மாகாண எல்லைகளின் பிரகாரம் காணப்படுவதில்லை. இதன் காரணமாக பிரயோக ரீதியான பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆகவே, மாகாணங்களின் பிரகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்தவித மாற்றங்களும் இடம்பெறமாட்டாது.''

**ஜனாதிபதி ரணில் நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய அக்கிராசன உரையில், தமிழர்களின் கவனத்தை ஈர்த்த பகுதியே இது. 13ஆவது திருத்த அமுலாக்கம் என்று கூறுவதை தவிர்த்திருக்கிறார் ரணில். மகாநாயக்க தேரர்களின் எதிர்ப்பினால் அவர் இதனை தவிர்த்திருந்தாலும் நேற்றைய ரணிலின் உரை வழமையான இலங்கை அரசியல் தலைவர்களின் உரை என்பதுதான் சுருக்கம்.**

**ரணில் நேற்று உரையாற்றும்போது பாராளுமன்றுக்குள் பிரதான எதிர்க்கட்சியோ அல்லது வேறு முக்கிய அரசியல் கட்சிகளோ இருக்கவில்லை. அவை பகிஷ்கரிப்பை செய்திருந்தன. ஆனால், ரணிலின் உரை முடிந்த கையோடு பாராளுமன்றுக்கு வெளியில் பிக்குமார் அணிதிரண்டு நடத்திய ஆர்ப்பாட்டம், எதிர்ப்புப் பேரணி என்பன நாட்டின் உண்மையான நிலைமையை விளக்கியுள்ளன.**

**ரணில் தனது கனவை கூறினாலும் அதனை இலேசில் நனவாக்கிவிட முடியாதென்பதுதான் நேற்றைய நாளின் செய்தி. பாராளுமன்றம் அருகே பேரணியில் சென்ற பிக்குமாரில் பிரதானமானவர் நாட்டின் அரசியலமைப்பின் பிரதியை தீயிட்டுக் கொளுத்தியதை நோக்கும்போது, ஜனாதிபதி அல்ல, கடவுளே வந்து சொன்னாலும் நாங்கள் இப்படித்தான் நடந்துகொள்வோம் என்பது போலிருந்தது.**

**சிங்கள மக்களால் மதிக்கப்படும் உயர்மட்ட பிக்குகளில் ஒருவரான ஓமல்பே சோபித பேசிய உரை குறித்தும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தாம் பாராளுமன்றம் அருகே பாதுகாப்பு அதிகாரி ஒருவருடன் பேசியதாகவும், கடும் கோப உணர்வுகளை அடக்கிக்கொண்டே தாங்கள் இருப்பதாக அந்த அதிகாரி தம்மிடம் கூறியதாகவும் சோபித தேரர் பாராளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் கூறினார்.**

**நாட்டின் பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் மனநிலை அப்படித்தான் இருக்குமெனில், தமிழர்களுக்கு தீர்வை வழங்க முதல் தனது பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ளவேண்டியது ஜனாதிபதியின் தலையாய கடமை என்பதை பொறுப்புள்ள ஊடகம் என்ற கோதாவில் இருந்து கூறிவைக்க விரும்புகிறோம்.**

**தனிச் சிங்களம் என்ற தனிச் சட்டம் ஒன்றை கொண்டுவந்தமைக்காக சிங்களவர்களால் போற்றப்படவேண்டிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, பின்னர் பௌத்த பிக்கு ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட வரலாறு இருக்கும்போது, சோபித தேரரின் மேற்கண்ட கருத்துக்குப் பின்னர், தமிழர்களுக்கு தீர்வைத் தருவதாக கூறும் ரணிலின் பாதுகாப்பு குறித்து சுட்டிக்காட்ட வேண்டியது எமது தார்மீக கடமையல்லவா?**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்கு தீர்வைத் தருவதாக வெறும் நடிப்புக்காக அல்லது அரசியலுக்காக கூறினாலும் இலங்கைத்தீவின் அரசியலில் கலந்துள்ள பௌத்த மேலாண்மைவாதம் அதற்கு இடமளிக்காது. 'ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம்' என்பது போலவே நேற்றைய பௌத்த பிக்குகளின் எதிர்ப்புப் பேரணியை கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வென்பது ரணிலுக்கு மட்டுமல்ல, தமிழர்களுக்கும் கனவாகவே முடியப்போகிறது. வரலாறும் அதுவே.**

## இன்றைய நாளில்..

- 1640 – இலங்கையின் நீர்கொழும்பு நகரை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.
- 1895 – வில்லியம் மோர்கன் கைப்பந்தாட்டத்தைக் கண்டுபிடித்தார்.
- 1900 – இலங்கையிலும் இந்தியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1900 – டேவிஸ் கிண்ண டென்னிஸ் போட்டி ஆரம்பிக்கப்பட்டது.
- 1913 – எரிவெள்ளிக் கூட்டம் ஒன்று வடக்கு மற்றும் தெற்கு அமெரிக்கப் பகுதிகளில் தென்பட்டது. இது பூமியின் சிறிய, குறுகிய வாழ்வுக் காலமுள்ள ஓர் இயற்கைத் துணைக்கோள் என வானியலாளர்களால் கூறப்பட்டது.
- 1959 – முதலாவது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையான ஆர்-7 சோவியத் ஒன்றியத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 1971 – சந்திரனில் தரையிறங்கிய மூன்றாவது விண்கலமான அப்பல்லோ-14 மூன்று அமெரிக்கர்களுடன் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியது.
- 1975 – சோயூஸ்-17 விண்கலம் பூமிக்குத் திரும்பியது.
- 1986 – ஏலியின் வால்வெள்ளி சூரியனுக்கு அண்மையில் எட்டரைக் கோடி கி.மீ. தூரத்தில் வந்தது.
- 1996 – கோப்பர் நீசியம் தனிமம் முதற்தடவையாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

# நாட்டுக்காக நம் அனைவரதும் வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்தல் வேண்டும்!

## ஜனாதிபதி ரணில் பாராளுமன்ற கொள்கை விளக்கவுரையில் தெரிவிப்பு



படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

கடந்த பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து, நான் கருத்துகளை முன்வைத்த சந்தர்ப்பத்தில் நாடு இருந்த நிலைமை பற்றி உங்களுக்கு நினைவிருக்குமென நான் நம்புகிறேன். கடந்த வரவு-செலவுத்திட்ட முன்மொழிவை சமர்ப்பித்தவேளை நாடு இருந்த நிலைமையும், அதேபோல் ஏழு, எட்டு மாதங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையும் உங்களுக்கு நினைவிருக்கும்.

கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் காரணமாக வரி வருமானம் வீழ்ச்சியடைந்ததை நாம் அறிவோம். 2019 டிசம்பர் 31ஆம் திகதியளவில் தொழில்முயற்சிகள், கம்பனிகள் மற்றும் தனிநபர்கள் 16 இலட்சம் பேர் வரி செலுத்தினார்கள். 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் வரி செலுத்தும் எண்ணிக்கை 5 இலட்சம் பேர் வரை வீழ்ச்சியடைந்தது. அரசின் வரி வருமானம் படுமோசமாக வீழ்ச்சியடைந்தது.

இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு விளையும் அழிவைப் புரிந்து கொண்ட பெரும்பாலான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மீண்டும் 2019ஆம் ஆண்டு காணப்பட்ட வரி முறைக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீலங்கா நிர்வாக சேவை சங்கம் 2022 ஏப்ரல் மாதம் பொருளாதார மற்றும் சமூக மறுமலர்ச்சிக்கான துரித முன்மொழிவுத்திட்டம் ஒன்றை முன்வைத்தது.

உழைக்கும்போதே செலுத்தும் வரியை நீக்கினால் நாடு 100 பில்லியன் ரூபாவை இழக்கும். வரி எல்லையை இரண்டு இலட்சம் வரை அதிகரித்தால் நாடு 63 பில்லியன் ரூபாவை இழக்கும். இழக்கப்படும் மொத்த தொகை 163 பில்லியன் ரூபாவாகும். இவ்வளவு பாரியதொரு தொகையை இழக்கும் நிலையில் நாம் இல்லை.

உலகின் ஏனைய நாடுகளில் கூடுதலான அளவு வரி அறவிடப்படுவது வரி செலுத்த வேண்டிய நபர்களிடம் ஆகும். இந்தியா – நேரடி வரி 67 சதவீதம். மறைமுக வரி 33 சதவீதம். 2021இல் பங்களாதேஷ் - நேரடி வரி 68 சதவீதம். மறைமுக வரி 32 சதவீதம். நேபாளம் - நேரடி வரி 69 சதவீதம். மறைமுக வரி 31 சதவீதம். 2021இல் தாய்லாந்து - நேரடி வரி 63 சதவீதம். மறைமுக வரி 37 சதவீதம். 2020இல் மலேசியா - நேரடி வரி 66 சதவீதம். மறைமுக வரி 34 சதவீதம். 2021 இல் இந்தோனேசியா - நேரடி வரி 60 சதவீதம். மறைமுக வரி 40 சதவீதம்.

ஆனாலும், எமது நாட்டில் நிலைமை அதற்கு மாற்றமானது ஆகும். 2021இல் எமது நாட்டின் நேரடி வரி 21 சதவீதம். மறைமுக வரி 79 சதவீதம்.

ஆகவே, இந்த வரி முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக நாம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அப்போது ஒட்டுமொத்த மக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமை குறைவடையும்.

பொருளாதார நெருக்கடி நிலைமையின் கீழ் பணவீக்கம் உயர்வடைகிறது. பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. தொழில்கள் அபாயத்தை எதிர்நோக்குகின்றன. தொழில்முயற்சிகள் வீழ்ச்சியடைகின்றன. சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் வாழ்க்கை நடத்துவது கடினமானதாக உள்ளது. ஆனாலும், இன்னும் ஐந்து, ஆறு மாத குறுகிய காலம் இக்கஷ்டத்தை தாங்கிக்கொள்ள முடியுமாயின் எமக்கு தீர்வை நோக்கி செல்ல முடியும். இவ்வாறு முன்னோக்கிச் சென்றால் ஆண்டின் மூன்றாவது, நான்காவது காலாண்டுகளில் அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவை செலுத்துவதற்கு எம்மால் முடியும். தனியார்துறைக்கு சலுகைகளை வழங்க முடியும். முழு நாட்டு மக்களதும் கைகளை இன்று உள்ளதை விடவும் வளமாக்க முடியும். தொழில் மூலமான வருமான மார்க்கத்தை அதிகரிக்க முடியும். வங்கி வட்டிவீதத்தைக் குறைக்க முடியும். மேலும் சுமார் மூன்று ஆண்டுகள் செல்லும்போது இன்று ஈட்டும் வருமானத்தை விட சுமார் 75 சதவீத வருமானத்தைப் பெற முடியும்.

தற்போது அனைத்து கஷ்டங்களுக்கும் மத்தியில் நலிவுற்ற பொருளாதாரம் காரணமாக அவதியுறும் வறுமையில் வாடும் குழுக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டோம். இதற்காக உலக வங்கி எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியது.

ஆயினும், எமது நாட்டில் நிவாரண உதவிகள் வழங்கும் முறை உருச் சிதைவுற்றுக் காணப்படுகிறது. அதிக வருமானம் உழைக்கும் நபர்கள் கூட நிவாரண உதவிகளைப் பெறுகின்றார் கள். நாம் இந்த நிலைமையை மாற்று வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். உண்மையான வறுமை சமூகத்தை நாம் அடையாளம் காண்கின் றோம். நிவாரண வங்கிக் கணக்கின் ஊடாக அவர்களுக்கு நேரடியாக பணம் செலுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை நாம் தயாரித்து வருகின்றோம்.

ஆனாலும், சில குழுக்கள் இந்த பயணத்திற்கு முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு அதிகாரம் கிடைத்தால் வரி குறைக்கப்படும் - சம்பளம் அதிகரிக்கப்படும் போன்ற கற்பனைக் கதைகளைக் கூறுகின்றார்கள். பல்வேறு முட்டுக்கட்டை போடும் செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்கின்றார்கள்.

நான் ஒருபோதும் செய்ய முடியாதவற்றைக் கூறமாட்டேன். அதிகாரத்துக்காக பொய் கூற மாட்டேன். வரவு-செலவுத்திட்ட உரையின் போதும் பாராளுமன்றத்தை திறந்துவைக்கும் போதும் நான் கூறிய அனைத்தையும் நடைமுறைப்படுத்தி வருகின்றேன். அதன் மூலம் பொருளாதாரத்தில் ஓரளவு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு எம்மால் முடிந்துள்ளது.

மறைப் பொருளாதாரத்தில் இருந்து நேர்கணிய பொருளாதாரத்தை நோக்கி நாம் தற்போது பயணம் செய்து வருகின்றோம். 2023ஆம் ஆண்டு இறுதியளவில் நேர்கணிய பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

நான் ஜனாதிபதியாக ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது நாட்டின் பணவீக்கம் 70% ஆகும். எமது செயற்பாடுகள் காரணமாக 2023 ஜனவரி மாதமளவில் அதனை 54 சதவீதமாக குறைப்பதற்கு எம்மால் முடிந்தது. 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் அதனை 54 சதவீதம் குறைப்பதற்கு எம்மால் முடிந்தது. அதனை தனி இலக்கத்திற்கு கொண்டு வருவதற்கு நாம் பார்கின்றோம்.

2022ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 13 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதற்கு எம்மால் முடிந்தது. அதற்காக உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் பெருமளவு பாடுபட்டார்கள். அதேபோல் இறக்குமதி செலவினத்தை 18 பில்லியன் டொலர்கள் வரை மட்டுப்படுத்த எமக்கு முடிந்தது. வெளிநாடுகளில் தொழில் புரியும் நபர்கள் இந்த இக்கட்டான நிலையில் தாய்நாட்டுக்கு உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்குகிறார்கள். 2022ஆம் ஆண்டு இறுதியளவில் 4 பில்லியன் டொலர் வெளிநாட்டு அந்நிய செலாவணியை அவர்கள் எமக்கு வழங்கினார்கள். பெரும்பாலும் பூச்சியத்துக்கு வீழ்ந்த எமது அந்நிய செலாவணி ஒதுக்கீட்டை 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதற்கு எமக்கு தற்பொழுது முடிந்துள்ளது. சுற்றுலா கைத்தொழிலை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு எம்மால் முடிந்துள் ளது. வீதிகள் முழுவதும் குறுகிய அரசியல் ரீதியான ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட தடைகளுக்கு மத்தியில் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தார்கள். உலகின் சிறந்த 10 சுற்றுலா இடங்களில் இலங்கையும் பெயரிடப்பட்டது. இந்த ஜனவரி மாதத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளார்கள். அது ஒரு சாதனையான எண்ணிக்கையாகும்.

இவ்வாறு அனைத்துத் துறைகளிலும் நாம் முன்னேற்றம் கண்டு வருகின்றோம்.

கிரேக்கம் சில காலங்களுக்கு முன்னர் எம்மைப் போன்றதொரு பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. வங்குரோத்து நிலையை அடைந்தது. நெருக்கடியிலிருந்து மீளுவதற்காக அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதமாகக் குறைத்து வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு மீண்டும் கடன்களைச் செலுத்தும் பலத்தை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு 13 ஆண்டுகள் சென்றன. அக்கால எல்லைக்குள் மூன்று தடவைகள் ஐ.எம்.எப். அமைப்பின் உதவி ஒத்தாசைகள் பெறப்பட்டன.

ஆனாலும், நாம் பயணிக்கும் இந்த திட்டத்தின் பிரகாரம் முன்னோக்கிச் சென்றால் 2026ஆம் ஆண்டளவில் வங்குரோத்து நிலையிலிருந்து எமக்கு மீளுவதற்கு முடியும். நான் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டவாறு நாட்டைக் கட்டியெழுப்பும் போராட்டத்துக்கு இந்தப் பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்தால், எமக்கு அதற்கு முன்னர் இந்த நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

தற்பொழுது நாம் கடன் மறுசீரமைப் புக்காக எமக்கு கடன் வழங்கிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். அதற்கு மேலதிகமாக ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமான மற்றைய ஒரேயொரு சர்வதேச நாணய நிதியம் மாத்திரம் ஆகும். அவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் அடித்தளத்தின் பிரகாரம் எமக்கு மேற்கொண்டு முன்னோக்கி பயணிக்க முடியும். அது தவிர எமக்கு வேறு எந்தவொரு மார்க்கமும் இல்லை. வேறு மாற்று வழிகள் இருப்பின் அதனை இச்சபைக்கு அறியத் தருமாறு நாம் பயணிக்கும் இந்தப் பாதையை விமர்சிக்கும் அரசியல் கட்சிகளிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்பொழுது நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களின் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளோம். கடந்த செப்டெம்பர் மாதமளவில் அடிப்படை இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எம்மால் முடிந்தது. கடன் பேண்தகு தன்மையை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் மாத்திரமே தற்போது எஞ்சியுள்ளது.

அதற்கு ஏற்புடைய வகையில் பரிஸ் சமூகத்துடன் நாம் இணக்கப்பாட்டுக்கு வந்தோம். பரிஸ் மாநாட்டில் அங்கத்துவம் வகிக்காத இந்தியா மற்றும் சீனாவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி னோம். இந்தியா எமது கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது. ஒரு புறம் பரிஸ் மாநாட்டுடனும் இந்தியாவுடனும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகிறது. நாம் நேரடியாக சீனாவுடன் கலந்துரையாடல் மேற்கொள்கின்றோம். எமக்கு அனைத்து தரப்பினர்களிடமிருந்தும் சாதகமான பதில் கிடைத்துள்ளது. ஏனைய நாடுகளின் பிரவேசம் மற்றும் சீனாவின் பிரவேசம் ஆகியவற்றுக்கு இடையில் ஒருமைப்பாட்டைக் கொண்டு வருவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இந்த முயற்சியின் போது எமக்கு உதவி செய்யும் அனைத்து நாடுகளுக்கும் எமது நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சர்வதேசம் எமக்கு வழங்கும் ஒத்து ழைப்பு பிரதிபலிப்பது என்னவெனில் நாம் செல்லும் பாதை சரியானது என்பதாகும். மக்கள் அனுபவிக்கும் அழுத்தம் குறைந்துள்ளமை எடுத்துக் காட்டுவது யாதெனில் இப்பாதை சரியானது என்பதாகும்.

2020ஆம் ஆண்டு நாம் ஐ.எம்.எப். அமைப்பில் இருந்து விலகினோம். அவ்வாறான தொலைநோக்கற்ற தீர்மானங்கள் தற்போதைய நிலை மைக்கு காரணமாக அமைந்துள்ளது. பங்களாதேஷ் தொடர்ந்தும் ஐ.எம்.எப். அமைப்புடன் இணைந்திருந்த காரணத்தால் அவர்களுக்கு அந்த அமைப்பில் இருந்து வேகமாக நிவாரணங்களைப் பெற முடிந்தது. எமக்கு அனைத்து தொடர்புகளையும் ஆரம்பத்திலிருந்து மீண்டும் ஆரம்பிப் பதற்கு நேர்ந்தது. எவ்வாறாயினும் நாம் கஷ்டத்துக்கு மத்தியில் ஆரம்பத்திலிருந்து பயணத்தை தொடர்ந்தோம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## நக்கல் நமசிவாயம்

*சரியா யோசிச்சுப் பார்த்தால், ரணில் செய்யுற ஒவ்வொரு வேலைகளாலும் மக்களிட்ட ஏச்சு வாங்குறது பொதுஜன பெரமுன தான்.. நல்லா யோசிச்சுப் பாருங்கோ புரியும்..!*



# உடப்பு ஓம் சக்தி பாலர் பாடசாலை தசாப்த விழா வெளியீடு



பாடசாலை முன் தோற்றம்

**வ**டமேல் மாகாணம் புத்தளம் மாவட்டத்திற்குட்பட்ட ஆராச்சிகட்டு பிரதேச சபையின் ஓர் அங்கமான உடப்பூர், ஒல்லாந்தர் காலத்தில் தென்னிந்தியாவின் இராமேஸ்வரம், அக்கா மடம், தங்கச்சி மடம் ஆகிய பிரதேசங்களில் இருந்து ஏழு தோணிகளில் கடல்மார்க்கமாக பயணித்து மன்னார், புத்தளம் வழியாக முந்தலை அடுத்துள்ள கடலும் ஆறும் சங்கமிக்கும் நிலப்பகுதியினை மையமாகக் கொண்ட நிலப்பகுதியான உடப்பை மையமாகக் கொண்டு வாழ்ந்து வரும் இவர்கள், இலங்கையில் வாழும் தமிழ் குழுமங்களில் தனக்கென ஒரு தனியான கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்கள், சமய வழிபாடுகளுடன் பாரம்பரியமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இம்மக்கள் இன்றளவும் தனித்துவமான தமிழ் சமூகமாக அடையாளம் காணப்படுகின்றனர். இச்சமூகத்தினர் கடற்றொழிலை தமது பிரதான ஜீவனோபாய தொழிலாக முன்னெடுத்து வருவதுடன் பிற தொழில்களாக இறால் பண்ணை, விவசாயம் தென்னைப் பயிர்ச்செய்கை ஆகியவற்றை மேற்கொள்வதுடன் இவ்வூருக்கான பாரம்பரிய அடையாளமாக விளங்கும் தங்க நிற வர்ணப்பூச்சுகளால் மிளிரும் உடப்பு வீரபத்திர காளியம்மன் ஆலயம் மற்றும் நூற்று எட்டு அடி உயரமான ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி பெருமானின் நவ தள ராஜகோபுரம் என்பன சமய ரீதியாக அடையாளப்படுத்துகிறது.

இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சி என்பது 1904ஆம் ஆண்டு உடப்பு தமிழ் வித்தியாலயம் உருவாக்கப்பட்டதிலிருந்து தொடங்கினாலும் அதற்கு முன்பிருந்தே ஓலை குடிசைகள் கொட்டில்களில் கல்வி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. இப்போது உடப்பு தமிழ் மகா வித்தியாலயமாக மிளிர்ந்து வரும் இப்பாடசாலைக்கு மேலதிகமாக பின்னர் 1960களில் ஆண்டிமுனை பாடசாலையும் உருவாக்கப்பட்டது. இப்போது உடப்பில் இப்பாடசாலை ஒரு தேசிய பாடசாலையாக திகழ்கின்றமை உடப்பு கல்வி வளர்ச்சியின் அடையாள சின்னமாகும். இது போலவே கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் தொடங்கப்பட்ட ஸ்ரீ கிருஸ்ணா ஆரம்ப பாடசாலை புத்தளம் மாவட்டத்தில் சிறந்த ஆரம்ப பாடசாலையாக தெரிவாகி விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்று ஊருக்கு பெருமை சேர்க்கிறார்கள்.

இந்நிலையில், உடப்பின் ஆரம்ப கல்வியானது 1976ஆம் ஆண்டில் தொடங்கி இன்றுவரை ஏராளமான பாலர் பாடசாலைகள் தோன்றி இடை நடுவே கைவிடப்பட்டாலும் கடந்த 2012 ஒக்டோபர் 24 விஜயதசமி அன்று ஏழு மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஓம் சக்தி பாலர் பாடசாலையானது இன்று தனது ஒரு தசாப்த நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. மேலும் உடப்பு பாலர் பாடசாலை வரலாற்றில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட முதலாவது பாடசாலையாகவும் இப்போது வரை ஒரே பாடசாலையாகவும் பெருமை பெற்றுள்ளது.

பாலர் பாடசாலை ஆசிரியருக்கான டிப்ளோமா கல்வி சான்றிதழ் பெற்றுள்ள ஆசிரியர் கிருஸ்ணதேவியினால் ஏழு மாணவர்களைக் கொண்டு 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 அன்று உடப்பு இந்து அறநெறி கழக கட்டிடத்தில் தற்காலிகமாக தொடங்கப்பட்ட இந்த பாலர் பாடசாலை இன்றும் அதே இடத்தில் தொடர்ந்து இயங்கி வருகிறது. பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஒரு தனி ஆளாக இப்பாடசாலையை தொடர்ந்து நிர்வகித்து வருகின்றார்.



தசாப்த விழா நினைவு நூல்

சமூகத்தில் பெண்களின் வகிபாகம் தொடர்பில் பேசுவோருக்கு இப்பாலர் பாடசாலை ஸ்பாதகரும் ஆசிரியருமான கிருஸ்ணதேவியின் சாதனைகள் ஒரு இன்றியமையாததாகும். மாணவர்களின் ஆரம்ப கல்வியை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து இந்த பாலர் பாடசாலையினை தனி ஒரு பெண்ணாக முன்னின்று நடத்திக் கொண்டிருக்கிறார். இன்றைய சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த பலரே தமது சமூக கடமையினை ஆற்றத் தவறுகிற சூழலில் தானாக முன்வந்து தன் சமூகப் பொறுப்பினை உணர்ந்து அதனை முன்னெடுக்கும் அளவுக்கு பெண்களின் பங்களிப்பு இருக்கிறது. கடந்த பத்து வருடங்களாக ஒரு நிரந்தரமான நிலையான கட்டிடமில்லாமல் அறநெறி பாடசாலை கட்டிடத்தில் முன்னெடுக்கப்படும் இப்பாலர் பாடசாலையானது, கடந்த பத்து ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு தனது ஆரம்பக் கல்வியினை வழங்கி இருக்கிறது என்பதோடு இன்று அந்த மாணவர்கள் தேசிய பாடசாலைகளிலும் கொழும்பு உள்ளிட்ட பிரபல பாடசாலைகளிலும் கல்வி, கலை, கலாசாரம் மற்றும் ஒழுக்க விடயங்களில் முன்மாதிரியாக விளங்கி வருகின்றனர். இந்தப் பாலர் பாடசாலையில் ஆரம்ப கல்வியினை கற்ற மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைகளிலும் சித்தியடைந்துள்ளனர்.


பாடசாலை ஸ்தாபகரும் இயக்குனரும் ஆசிரியருமான கலாவிபூஷணம் திருமதி வீரபத்திரன் கிருஷ்ணதேவி கணேசன்
h

பல்வேறு தேவைப்பாடுகளுடன் தொடந்து இயங்கி வரும் இப்பாடசாலையின் தசாப்த விழா நிகழ்வுகள் இன்று (09-02-2023) வியாழக்கிழமை பாடசாலை மாணவர்களின் கைப்பணி பொருட்களை உள்ளடக்கியதாக கண்காட்சிகளும் இப்பாடசாலையின் பத்தாண்டு சேவையை நினைவுகூரும் முகமாக 'சிங்கப்பெண்ணே' எனும் நூல் வெளியீடும் மாலை உடப்பு இந்து ஆலய முன்றலில் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

கலை, கலாசார பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் உடப்பின் பெருமையினை உலகிற்கு பறைசாற்றும் வண்ணம் உருவாகி இருக்கும் 'ஓம் சக்தி' பாலர் பாடசாலையானது எதிர்காலத்தில் இவ்வூரின் பாடசாலை மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியை சிறப்பாக வழங்குவதில் முன்னின்று உழைக்கும் என்பதோடு இப்பாடசாலையினால் இவ்வூர் பெருமைக் கொள்கிறது. மேலும், இப்பாடசாலையின் ஸ்தாபகரும் இயக்குநரும் ஆசிரியருமான கிருஸ்ணதேவி கணேசனின் இப்பெரும் முயற்சிக்கு பெரிதும் துணை புரியும் அவரது கணவர், பிள்ளைகள், குடும்பத்தார், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் இவ்வூரவர்களுக்கும் வாழ்த்துகள்.

**ஆக்கம் :கேஜி**


விழாக் குழுவினர்


2022 தலைமை ஆசிரியரும் மாணவர்களும்


மாணவர்களின் இசைக்குழு


2023ஆம் ஆண்டு புதிய மாணவர்களும் ஆசிரியர்களும்

# பொருளாதார யுத்தத்தில் வெற்றிகொள்ள வேண்டும்

## ஜனாதிபதி ரணில்

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

தற்போது மக்கள் படும் துயரம் அன்றைய நாளை விடக் குறைவானதாகும். நாம் பயணிக்கும் இந்த மார்க்கம் சரியானதென்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாக் கைத்தொழில் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறது. வீழ்ச்சியடைந்த விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறை மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது. பெரும்போக அறுவடை அதிகரிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. இம்முறை அறுவடைகளை கொள்வனவுசெய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 20 பில்லியன் ரூபா பெறுமதியான நெல் அறுவடைகளை அரிசியாக மாற்றி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதாந்தம் 10 கிலோ வீதம் இரண்டு சந்தர்ப்பங்களில் இலவசமாக வழங்கப்படும். வரிசைகள் இல்லை. மின்சாரத் துண்டிப்பு குறைவடைந்துள்ளது.

பாடசாலை நடவடிக்கைகள் வழமை நிலைக்கு வந்தவண்ணம் உள்ளன. மாணவ, மாணவிகள் மீண்டும் கல்வி சுற்றுலாக்களை மேற்கொள்கிறார்கள். பரீட்சைகள் இடம்பெறுகின்றன. இதே பாதையில் தொடர்ந்தும் பயணித்து நாட்டை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதா, அவ்வாறின்றி இந்த மார்க்கத்துக்கு முட்டுக்கட்டை போட்டு எதிர்ப்புக் கோஷங்களை முன்வைத்து அரசியல்வாதிகள் மீண்டும் நாட்டை அழிவடையச் செய்வதா என்ற தீர்மானம் இன்று எம் முன்னிலையில் உள்ளது.

குறுகிய அரசியல் நோக்கங்கள் இல்லாத நாட்டை நேசிக்கும் பெரும்பான்மை மக்களது தீர்மானம் இதேபோன்று முன்னோக்கிச் செல்வதென்பதை நாம் அறிவோம்

இன்று இலங்கை பொருளாதார ரீதியாக ஒரு கவலைக்கிடமான நோயாளியாக உள்ளது. உடனடியாக நோயை இனங்கண்டு அதற்குத் தேவையான சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனாலும் சிலர் இதுவரை சிகிச்சை வழங்கிய வைத்தியர்களின் குறைகளைக் கூறி வருகின்றார்கள். அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென அவர்கள் கூறுகின்றார்கள்.

ஆனாலும் ஆரம்பத்தில் நோயாளியை குணப்படுத்துவதற்கு நான் முயற்சிசெய்து வருகின்றேன். நோயாளியை குணப்படுத்திய பின்னர் எமக்கு ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். நாம் நோயாளியை குணப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். நான் அதனையே தற்போது மேற்கொள்கின்றேன்.

நோயாளியை கவலைக்கிடமான நிலையிலிருந்து மீட்டெடுத்தவுடன் நாம் மற்றுமொரு நடவடிக்கையை மேற்கொள்வோம். மீண்டும் இவ்வாறான ஒரு நெருக்கடி ஏற்படக்கூடிய அனைத்து வழிகளையும் தடைசெய்வோம். இந்த நோக்கத்துக்காக நாம் ஊழல்களைத் தடுக்கும் சட்டத்தைக் கொண்டுவருவோம். ஐஎம்எவ் அமைப்புடன் ஏற்படுத்திய இணக்கப்பாட்டுக்கமைய உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து 'திருடப்பட்ட சொத்துகளை மீண்டும் கண்டறியும் முயற்சியை' இச்சட்டத்தில் உள்ளடக்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

ஐஎம்எவ் அமைப்பின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்ற பின்னர் எமக்குப் பொருளாதாரத்தை ஓரளவு ஸ்திரத் தன்மைக்குக் கொண்டுவர முடியும். ஆயினும், நோயை முற்றுமுழுதாக குணப்படுத்த வேண்டுமாயின் எமக்கு முன்னோக்கிய சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஐஎம்எவ் அமைப்பின் உறுதிப்பாடு கிடைக்கப்பெற்றவுடன் உலக வங்கி, ஆசியா அபிவிருத்தி வங்கி போன்ற ஏனைய சர்வதேச நிறுவனங்களிடம் கடனுதவிகள் பெறல் தொடர்பில் எதிர்பார்ப்பு ஏற்படுத்திக்கொள்ள முடியும். அதன்போது முதலீட்டாளர்களின் நம்பிக்கை உறுதிசெய்யப்படும். அதன் காரணமாக அந்நிய செலாவணி நாட்டுக்கு பாய்ச்சப்படும் போக்கு ஏற்படும். நாம் அந்த உதவிகளை உரிய முகாமைத்துவத்துடன் நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்துதல் வேண்டும்.

அத்துடன், சுற்றுலாக் கைத்தொழிலில் ஒரு



குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எமக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இடைநடுவில் தடைப்பட்டுள்ள பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

நாம் உடனடியாக பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்ட தாய்லாந்து மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் இன்று நாளுக்கு நாள் முன்னோக்கிச் செல்கின்றது. அவ்வாறு இல்லாதுவிடின் எமக்கு பின்னோக்கிச் செல்ல நேரிடும்.

இந்த மறுசீரமைப்புகளின்போது அரசின் கடமைப் பொறுப்பினை நாம் சரியாக இனங்காணுதல் வேண்டும். பின்னணியிலிருந்து தனியார் துறையை நேரடியாக தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துதல் அரசின் பிரவேசமாக அமைதல் வேண்டும். ஒழுங்குபடுத்தல் பணிகள், பொது வசதிகள் மற்றும் சட்டமும் ஒழுங்கையும் நிலைநாட்டல் போன்ற துறைகள் மீது மாத்திரம் அரசு தலையீட்டை மேற்கொள்ளுதல் வேண்டும். பொருளாதாரத்தின் உந்துசக்தியாக தனியார் துறையை பயன்படுத்துதல் வேண்டும். அவ்வாறே வெளிநாட்டு பொருளாதார உறவுகளை வலுவடையச் செய்வதற்காக தனியார் தொழில் முயற்சியாண்மையை பங்கேற்கச் செய்தல் வேண்டும்.

உற்பத்தியை அதிகரித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல், கைத்தொழில் மற்றும் விவசாய நவீனப்படுத்தல் ஆகியவற்றிற்காக உச்சளவில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறே கடன்களை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்கள் மதிப்பீட்டுச் செயன்முறையின் அடிப்படையில் மாத்திரம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். அரசியல் காரணங்களுக்காக அரச முதலீடுகளை வழிநடத்தும் முறையை இடைநிறுத்துதல் அத்தியாவசியமான ஒரு விடயமாகும்.

அண்மையில் வங்கிக் கடன்களை அறவிடுவதற்காக சலுகைக் காலம் வழங்கப்பட்டதால் வங்கி முறைமை பலவீனமடைந்து காணப்பட்டது. தற்போது அந்த சலுகைக் காலம் முடிவடைந்துள்ளது, அதனால் வங்கிகள் மீண்டும் பலமடைந்துள்ளன.

அதேபோல் இடர்கள் காரணமாக பலவீனமுற்ற தொழில்முயற்சிகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். பொருளாதார வளர்ச்சியுடன் அவர்களுக்கு மீண்டும் எழுந்து நிற்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.


உற்பத்தியை அதிகரித்தல், பொருட்கள் சேவைகளை வழங்குதல், கைத்தொழில் மற்றும் விவசாய நவீனமயப்படுத்தலுக்காக உயர்ந்தபட்ச தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

தற்போது நாட்டின் வருமானம் மொத்த தேசிய உற்பத்தியில் 8.15 சதவீதமாகும். இதனை 15 சதவீதமாக அதிகரிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

நாம் பிரச்சினைகளை வழிவிட்டோமே தவிர, நீண்டகால தீர்வைத் தேடவில்லை. அதன் விபரீதத்தைத்தான் நாம் அனைவரும் இன்று அனுபவிக்கின்றோம்.

நினைவிற்கொள்ளவும். நாம் இன்று ஒரு பொருளாதார யுத்தத்தை எதிர்நோக்கி உள்ளோம். இந்த யுத்தம் வடக்கு, கிழக்கு யுத்தத்தை விட ஒரு தீர்க்கமான யுத்தமாகும். வடக்கு, கிழக்கு மோதலில் இனங்கள் பிளவுபட்டன. ஆயினும், இந்த யுத்தத்தில் அனைத்து இனங்களும் ஒன்றாக இணைந்து போராட வேண்டியுள்ளது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் வழி விடுவோமாயின், இப்பொருளாதார யுத்தத்தில் நாம் தோல்வியடைவோம். அவ்வாறு இடம்பெறுமாயின் சில அரசியல் கட்சிகள் கூறுவது போன்றதொரு கற்பனை உலகம் எமக்கு உரித்தாகாது. நாம் பொருளாதார காலனித்துவத்திற்கு உட்படுவோம். நம் அனைவரதும் பொறுப்பு யாதெனில், துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு இப்பொருளாதார யுத்தத்தை வெற்றிகொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதலாகும்.

பொருளாதார யுத்தத்தை வெற்றி



கொள்வதற்கும் அதன்பின்னர் அபிவிருத்தியடைந்த பொருளாதாரம் ஒன்றை எமது நாட்டில் உருவாக்குவதற்கும் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையும் சமாதானமும் முக்கியமானதாகும்.

சம்பந்தனும் நானும் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டோம்.

நாம் இருவருக்கும் பொதுவான ஒரு கனவு உண்டு. நாம் இருவரும் பாராளுமன்றத்தில் இருக்கின்ற போதே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்குதலாகும். அக் கனவு பற்றி அன்றுமுதல் இன்றுவரை நாம் கலந்துரையாடுகின்றோம். முயற்சி செய்கின்றோம். முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கு யுத்தம் முழு நாட்டையும் பாதித்தது. பல பிரதேசங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. முழுமையான வடக்கு மாகாணமும் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் பல பிரதேசங்கள் யுத்தம் காரணமாக பாரிய துன்பங்களை அனுபவித்தன.

இப்பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு செயற்படுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். அப்பிரதேசங்களுக்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவோம்.

வடக்கில் காணி தொடர்பாக தீர்க்கப்படாத மேலும் பிரச்சினைகள் உள்ளதை நாம் அறிவோம். பலாலி முகாமுக்காக கையேற்கப்பட்டுள்ள 100 ஏக்கர் காணிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன. மேலும் பல ஏக்கர் காணிகள் தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக இராணுவம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படுகிறது. ஏனைய பாதுகாப்பு முகாம்களை அண்மித்த காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் காணிகள் தொடர்பில் பாரதூரமான பிரச்சினை காணப்படுகிறது. இதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் காடுகள் பற்றி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் விமானப்படம் (drone photography) அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களால் காடுகளாக்கப்பட்ட கிராமங்களின் பல காணிகள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானியில் பெயரிடப்பட்டன. தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளது. ஆனாலும் தமக்கு உரித்தான பல காணித் துண்டுகள் வனப் பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால் மக்களுக்குப் பாரியளவில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. மொனராகலை தொடக்கம் யாழ்ப்பாணம் வரை மக்கள் இப்பிரச்சினையை எதிர்கொண்டுள்ளார்கள்.

1985ஆம் ஆண்டின் வரைபடத்தின் பிரகாரம் காடுகள் மற்றும் காணிகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிட்டு இந்த அநீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

காணாமல்போன நபர்கள் தொடர்பாக கண்டறிவதற்கான முறைமையை நாம் முறைமைப்படுத்தி துரிதப்படுத்துவோம்.

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரில் சிறை வைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றியும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். எந்தவொரு வழக்கு விசாரணையுமின்றி பல ஆண்டுகளாக அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். படிப்படியாக இந்த சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

தேசிய காணி சபை ஒன்றை தாபிப்பதற்கான தேசிய காணிக்கொள்கை வரைவு தயாரிக்கப்படும்.

மத்திய அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் காரணமாக கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் மாகாண சபைகளின் அதிகாரங்கள் குறைவடைந்துள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இதன் காரணமாக மாகாண அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாம் புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

சுகாதாரத் துறை தொடர்பாகவும் இதேபோல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகாரப்பகிர்வு செயன்முறையை முறையாக மற்றும் உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் சட்டங்களுக்கான திருத்த வரைவுகள் தயாரிக்கப்படும். 1992ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க அதிகாரப்பகிர்வு (பிரதேச செயலாளர்கள்) சட்டம், 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் இடைநேர் விளைவு ஏற்பாடுகள் சட்டம் மற்றும் 1990ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்த) சட்டம்

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்துக்கு இடையில் ஒருங்கிணைப்புப் பணிகளை முறைமைப் படுத்துவதற்காக நவீன முறையில் மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமையை தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வனைத்து சட்டங்கள் மற்றும் வரைவுகளை நாம் பாராளுமன்றத்தின் தேசிய சபைக்கு சமர்ப்பிப்போம். அது தொடர்பாக கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தேசிய சபைக்கு வழங்கப்படும்.

பிரதி பொலிஸ் மா அதிபர் பிரிவு எல்லைகள் தற்பொழுது மாகாண எல்லைகளின் பிரகாரம் காணப்படுவதில்லை. இதன் காரணமாக பிரயோக ரீதியான பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆகவே, மாகாணங்களின் பிரகாரம் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரிவு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்தவித மாற்றங்களும் இடம்பெற மாட்டாது.

மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தைப் பாரதூரமான முறையில் மீறுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டீ.நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. அதன் பரிந்துரைகள் பற்றி நாம் கவனம் செலுத்துவோம்.

யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கின் அபிவிருத்திக்காக புறம்பான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். மல்வத்துஓயா அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும். கிழக்கு மாகாண நதிகள் மற்றும் நீரை முகாமை செய்தல், வடமராச்சி குளம் மற்றும் களப்பு புனரமைப்பு, குடிநீர் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக அதன் மூலம் நீரை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மூலம் இப்பிரதேசங்களின் மின்சாரத் தேவைப்பாட்டை நிறைவுசெய்வதற்காக பயன்படுத்தப்படும். சூரியசக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் சக்தி இதற்காக பயன்படுத்தப்படும்.

சுற்றுலாக் கைத்தொழிலுக்காக கூடுதல் வய்ப்பு வழங்கப்படும். முதலீட்டு வலயங்கள் அமைக்கப்படும். விவசாய நடவடிக்கைகளை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் வசதிகள் வழங்கப்படும்.

காங்கேசன்துறை துறைமுகம் நவீனமயப்படுத்தப்படும், விரிவாக்கப்படும். திருகோணமலையை நவீன சர்வதேச நகரமாக அபிவிருத்தி செய்யப்படும். மோதல்களுக்கு அகப்பட்டு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைந்த கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்காக விசேட அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்.

பெருந்தோட்ட மக்கள் தொடர்பாகவும் நாம் விசேட கவனம் செலுத்துவோம். இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக அவர்கள் இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார்கள்.

பெருந்தோட்டத் துறைக்காக பாரியளவு சேவையாற்றிய சௌமியமூர்த்தி தொண்டமானும் நானும் ஒன்றாக அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டோம். நாம் இருவரும் பெருந்தோட்ட மக்களின் நலனுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட்டோம். தற்போது பெருந்தோட்ட மக்களின் சட்ட ரீதியான அனைத்து உரிமைகளையும் நாம் வழங்கியுள்ளோம். ஆனாலும் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பாக பல்வேறு சிக்கல்கள் இன்னும் எஞ்சியுள்ளன.

(07ஆம் பக்கம் பார்க்க...)

# நாட்டுக்காக நம் அனைவரதும் வாழ்க்கைமுறைகளை மாற்றியமைத்தல் வேண்டும்

## ஜனாதிபதி ரணில்



இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாம் பெருந்தோட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். 200 வருடங்களாக இலங்கையின் பொருளாதாரத்தை வளம்பெறச் செய்வதற்கு பாடுபடும் அவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் இலங்கை மக்களின் ஒரு பிரிவினராக மாற்றப்பட வேண்டும்.

நான் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் எனது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக ஏ.சீ.எஸ்.ஹமீட் தெரிவு செயற்பட்டார். இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் விசேடமான நிலைமை பற்றி அவர் எனக்கு விளக்கமளித்துள்ளார். அடிக்கடி முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதனை நாம் அறிவோம். அது தொடர்பாகவும் நாம் முழு அவதானம் செலுத்துகின்றோம்.

சிங்கள சமூகமும் அவர்களுக்கென மட்டுப்படுத்தப்பட்ட பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. அது பற்றியும் நாம் கவனம் செலுத்துகின்றோம். அப் பிரச்சினைகள் தொடர்பாக விரிவானதொரு கலந்துரையாடல் தேவைப்படுகிறது. விசேடமாக சாதி வேறுபாடுகள் காரணமாக சமூகத்தில் ஓரம் காட்டப்பட்டுள்ள சமூகங்கள் தொடர்பில் முழு அவதானம் செலுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறான அனைத்து விடயங்கள் பற்றியும் கவனம் செலுத்தி ஒற்றையாட்சி அரசில் உயர்ந்தபட்ச அதிகாரத்தைப் பகிர்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனாலும் நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்திய ஒரு விடயத்தை மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நாட்டைப் பிரிப்பதற்கு அல்லது பிரிப்பதற்குத் துணை போகும் எந்தவொரு நடவடிக்கையையும் நாம் மேற்கொள்ள மாட்டோம்.

எனக்கு இந்த பாராளுமன்றத்தில் குழுவொன்று கிடையாது. நான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கு ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் காணப்படுகின்றார். ஆனாலும் நான் ஜனாதிபதி என்ற ரீதியில் அந்தக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. நான் ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். இங்கு கட்சி அரசியல் எனக்கு இல்லை.

ஆகவே, இந்த அனைத்து முன்மொழிவுகளையும் நான் பாராளுமன்றத்தின் தேசிய சபை ஊடாகவே நடைமுறைப்படுத்துவேன். அதற்கு மேலதிகமாக மக்கள் கருத்துப் பிரதிநிதித்துவப் பணிக்காக நாம் ஜன சபைச் சட்டத்தை சட்டமாக்குவோம்.

நான் முன்னைய பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியவாறு புதிதாக சிந்தித்து புதியதொரு பயணத்தை மேற்கொள்வதற்குரிய காலம் தற்போது வந்துள்ளது. இதுவரை நாம் பின்பற்றிய சம்பிரதாய அரசியல் தொடர்ந்தும் செல்லுபடியாகாது. அரசியல் நன்மைகளுக்காக போலியாக மற்றும் மூடநம்பிக்கையின் மூலம் மேற்கொண்ட ஏமாற்றுதல்கள் எதிர்காலத்துக்குப் பொருந்தாது.

முறைமை மாற்றம் தொடர்பாக பேசுகின்ற ஒருசில அரசியல் கட்சிகள் தன்னைத் தவிர, ஏனைய நபர்களை மாற்றுமாறு யோசனை தெரிவிக்கின்றார்கள். இதுவும் சம்பிரதாய அரசியலில் ஒரு பகுதியாகும். நாம் வந்தால் நாம் மாற்றுவோம். அவ்வாறுதான் கூறுவார்கள். நாம் கோணலாக சென்று மற்றவர்களை மாற்றுவதற்கு முயற்சி செய்கின்றோம்.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்காக உயிரைப் பணயம் வைத்து பேசியவர்கள் அதிகாரத்தின் முன்னே சுயாதீன ஆணைக்குழுக்கள் வேண்டாமென கூறுகின்றார்கள். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நிராகரித்த நபர்கள், தாம் அதிகாரத்துக்கு வந்தால் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தும் விதம் பற்றிக் கூறுகின்றார்கள். அதிகாரத்துக்காக கொள்கையை மாற்றுகின்றார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை நாம் அனுபவித்தவைகள் இவைதான்.

இந்த நிலையை நாம் மாற்றியமைக்க வேண்டும். இன்றேல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு நம் எவருக்கும் முடியாது.

மாற்றத்தை எம்மிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். நாம் எம்மிலிருந்து நாம் அனைவரும் மாற்றமடைதல் வேண்டும். இந்த மாற்றம் நல்ல மாற்றமாக அமைதல் வேண்டும். அரசியல்வாதிகள் என்ற ரீதியில் நாம் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். அரசியல் கட்சிகள் மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். பாராளுமன்றம் மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். நிறைவேற்றுத் துறை மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். நீதித்துறை மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். அரச சேவை மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும்.

இந்த மாற்றத்துக்காக நாம் தற்போது பாராளுமன்ற மேற்பார்வை செயற்குழு முறையை தாபித்துள்ளோம். ஆயினும், இன்னமும் மேற்பார்வை செயற்குழுவுக்கு பிரதிநிதிகள் நியமிக்கப்படவில்லை. அதனைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு நான் பாராளுமன்றத்தை வினவுகின்றேன். மேற்பார்வை செயற்குழுக்கள் மூலம் உயர்ந்தபட்ச பயனை அடைந்துகொள்வதற்கான மனமாற்றத்தை ஏற்படுத்துவது இந்தச் சபையிலுள்ள உங்கள் அனைவரதும் பொறுப்பாகும்.

நாம் அத்துடன் நின்றுவிடப் போவதில்லை. பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் அரசாங்கத்தின் செயலூக்கமான பங்காளர்களாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

இதற்காக,

- ★ முழுமையான சுயாதீனமுள்ள பாராளுமன்ற வரவு-செலவு அலுவலகம் ஒன்று தாபிக்கப்படும்.
- ★ தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கவிழுமியம் தொடர்பில் காணப்படும் சட்டவிதிகள் போதுமானதாக இல்லை. ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளை முன்மாதிரியாகக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கவிழுமியம் மற்றும் பாராளுமன்றத்தின் தரம் தொடர்பான ஒரு சட்டமூலம் தயாரிக்கப்படும்.
- ★ விருப்புவாக்கு முறைமை பல்வேறு ஊழல்களுக்கு ஏதுவாய் அமைவதாக நாம் தற்போது பிரயோக ரீதியில் இனம் கண்டுள்ளோம். ஆகவே, மாற்றுத் தேர்தல் முறைமையொன்றின் தேவையை முழுநாடும் உணர்ந்துள்ளது. பாராளுமன்றக் கட்சித் தலைவர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். புதிய தேர்தல் முறைமையில் புத்திஜீவிகள், இளைஞர் சமுதாயம் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டுமென நான் நம்புகின்றேன்.

இன்று இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படும் அரசியல் கட்சிகள் தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும். அரசியல் கட்சிகள் என்பதை விட தேர்தலுக்காகவே உருவாக்கப்பட்ட அரசியல் இயக்கங்கள் இன்று பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை பணத்துக்காக விலைபோன அரசியல் கட்சிகளாகும். புறக்கோட்டை நடைபாதை வியாபாரம் போன்று கட்சிகளையும் அதன் சின்னங்களையும் விற்பனை செய்கிறார்கள். ஒருசில விலை போகின்றன.

இலங்கையின் அரசியல் கட்சிகள் மற்றும் அவை செயற்பட வேண்டிய முறை பற்றி கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

கட்சிகளைப் பதிவுசெய்தல், வெளிப்படைத் தன்மையுடன் செயற்படல், அங்கத்தவர்களின் உரிமைகள், நிதியம் மற்றும் வருமானம் ஈட்டுதல், தேர்தல் நடவடிக்கைகளுக்காக செலவு செய்தல், ஊடகப் பயன்பாடு போன்ற விடயங்கள் தொடர்பில் ஆழமாக ஆராயும் பொறுப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

இப் பணியின்போது கென்யா, ஜேர்மனி மற்றும் நோர்வே நாட்டு அரசியல் கட்சிகள் தொடர்பான சட்டம், ஐக்கிய இராச்சியத்தின் வாக்காளர் சட்டம், அரசின் பொறுப்புக்கூறல் தொடர்பான ஐரோப்பிய முறைமை, ஐக்கிய இராச்சியத்தின் அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் கருத்துக்கணிப்புச் சட்டம் ஆகிய சட்டங்களை அடிப்படையாகக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்காலத்தை மிகவும் சிறந்ததாக மாற்றியமைப்பதற்காக புதிய நிறுவனங்கள், புதிய சட்டவிதிகள் மற்றும் பல புதிய கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வரலாறு தொடர்பான நிறுவனம், பொருளாதார விஞ்ஞானம் மற்றும் வியாபார நிறுவனங்கள், மகளிர் மட்டும் ஆண், பெண் பாலினம் தொடர்பான நிறுவனங்களை நாம் புதிதாக தாபிப்போம். அதேபோல் நான்கு புதிய பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்படும். அரச மற்றும் அரச கொள்கைகள் தொடர்பான பல்கலைக்கழகம், விவசாய தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் மற்றும் விளையாட்டுத் துறை பல்கலைக்கழகம்.

புதிய சட்ட விதிகள் மற்றும் சட்டங்கள் பலவற்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- ★ பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுச் சட்டம்
- ★ ஆண், பெண் பாலின சமத்துவ சட்டம்
- ★ பெண்களை வலுவூட்டும் சட்டம்
- ★ சிறுவர் பாதுகாப்புச் சட்டம்
- ★ இளைஞர் பாராளுமன்ற மறுசீரமைப்புச் சட்டம்
- ★ போதைப்பொருள் தடுப்பு கட்டளையிடும் தலைமையக சட்டம்
- ★ உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு
- ★ பயங்கரவாதத் தடுப்பு மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம்
- ★ தற்போது நடைமுறைப்படுத்தப்படும் பிரசித்த நாட்டிய கட்டுப்பாட்டுச் சட்டம் இல்லாதொழிக்கப்படும். அரசியலமைப்பில் உள்ள கருத்து தெரிவிக்கும் உரிமையினை அடிப்படையாகக்கொண்டு கலைப் படைப்புகளை வகைப்படுத்தும் சட்டம் தயாரிக்கப்படும்.

எமது நாடு காலநிலை மாற்றங்களுக்கு உட்படும் வலயத்தில் அமைந்துள்ளது. ஆகவேதான் நாம் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். அது தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை மேற்கொண்டால் எமக்கு பசுமை ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு காணப்படுகிறது.

அவை அனைத்தையும் கவனத்திற் கொண்டு நாம் இந்தச் சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

- ★ காலநிலை மாற்றச் சட்டம்
- ★ சமூக நீதிக்காக ஆணைக்குழுச் சட்டம்
- ★ மீள் காடு வளர்ப்பு மற்றும் தாவர பாதுகாப்புச் சட்டம்
- ★ உயிரோட்ட முறைமைச் சட்டம் – மகாவலி கங்கை, சிங்கராஜ வனம், சிவனொளிபாத பிரதேசம் மற்றும் வனச் சிகரம், ஹோட்டன் சமவெளி, நக்கில்ஸ், ஆதமின் பாலம் ஆகியன இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.
- ★ கடல் வள ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ சட்டம்.
- ★ முத்துராஜவெல பாதுகாப்புச் சட்டம்.

பொருளாதாரம் தொடர்பாகவும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரச செலவு முகாமைத்துவத்துக்காக ஸீரோ பட்ஜட் அல்லது பூச்சியத்தை அடிப்படையாகக்கொண்ட வரவு-செலவுச் செயன்முறை ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

- ★ வருமான அதிகாரச் சட்டம்
- ★ வெளிநாட்டுக் கடன் முகாமைத்துவச் சட்டம்
- ★ உணவுப் பாதுகாப்புச் சட்டம்
- ★ அரச சொத்து முகாமைத்துவச் சட்டம்
- ★ பொருளாதார ஸ்திரத்தன்மை சட்டம்
- ★ தேசிய ஓய்வூதிய பங்களிப்புச் சட்டம்
- ★ புதிய மதுவரிச் சட்டம்
- ★ அந்நிய செலாவணிச் சட்ட திருத்தம்
- ★ புன்வத் சட்டம்
- ★ வெளிநாட்டு வியாபார மற்றும் முதலீட்டுச் சட்டம்
- ★ டிஜிட்டல் தொழில்நுட்பச் சட்டம்
- ★ கறுவா அபிவிருத்தித் திணைக்களச் சட்டம்
- ★ பரஸ்பர இணக்கப்பாட்டின் கீழான விவாகரத்துச் சட்டம்

இவ்வாறான பொருளாதார சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புகளை வெற்றியடையச் செய்யவேண்டுமாயின் சரியான விடயங்களின் அடிப்படையில் மக்களுக்கு அறிவூட்டுதல் ஓர் அத்தியாவசியமான விடயமாகக் காணப்படுகிறது. சமூகத்தை அறிவூட்டும் பிரதான வகிபாகம் ஊடகத்துக்கு உரியதாகும்

அதற்காக ஊடகவியலாளர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச தரத்தில் பயிற்சி வழங்கப்படல் வேண்டும். 1993இல் நான் பிரதமர் என்ற ரீதியில் ஊடக பயிற்சி நிறுவனம் ஒன்றை தாபித்தல் தொடர்பில் பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக கலாநிதி காமினி கொரயாவின் தலைமையில் குழுவொன்றை நியமித்தேன். அந்த நிறுவனத்தைத் தாபிப்பதற்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றபோதும் 1994 பொதுத் தேர்தல் காரணமாக அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதன் காரணமாக ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச தரத்தில் பயிற்சி வழங்குவதற்காக ஊடக நிறுவனம் முதல் பல்கலைக்கழகம் வரையிலான நிறுவன முறைமை ஒன்றை தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த பல தசாப்த காலத்தை ஆராய்கின்ற போது ஊடகங்களின் வகிபாகம் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. ஆகவே, ஊடக மறுசீரமைப்பு எமது நாட்டுக்குத் தேவையாக உள்ளது. இதன்போது சம்பிரதாய ஊடகம் மற்றும் சமூக ஊடகம் ஆகிய இரண்டு துறைகள் பற்றியும் நாம் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆகவேதான் ஊடகங்கள் தொடர்பிலும் தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

அரச மற்றும் ஊடக கைத்தொழில் ஆகியன ஒன்றிணைந்து கூட்டு சுய ஒழுங்குபடுத்தல் முறைமை ஒன்று பற்றி கவனம் செலுத்துவது முக்கியமானதென நான் கருதுகின்றேன். இணைய அவகாசத்தில் பொய்யான செய்திகள், வெறுப்பூட்டும் வெளியீடுகள், பிழையான தகவல்கள், சிறுவர் மற்றும் பெண்கள் துன்புறுத்தல்கள், தொந்தரவுகள் மாத்திரமன்றி மோசடிகள் மற்றும் ஊழல்களையும் நாம் அனுபவித்து வருகின்றோம். இது தொடர்பாக சமூக ஊடக வலையக் கம்பனிகள் உள்ளடங்கலாக தெட்டத்தெளிவான ஒழுங்குபடுத்தல் முறைமை ஒன்று தேவைப்படுவதாக நாம் கருதுகின்றோம்.

நாம் இங்கு கவனம் செலுத்தவேண்டிய முக்கியமான ஒரு விடயம் யாதெனில், கொள்கை தொடர்பான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதாகும்.

அரசாங்கங்கள் மாறுகின்றபோது மாற்றமடையாத தேசிய கொள்கை. அமைச்சர்கள் மாற்றமடையும்போது மாற்றமடையாத தேசிய கொள்கை. உலகத்தின் அபிவிருத்தியடைந்த அனைத்து நாடுகளும் நிலையான கொள்கைகளின் ஊடாக முன்னோக்கிச் சென்ற நாடுகளாக காணப்படுகின்றன. காலத்துக்கு ஏற்றவாறு கொள்கைகள் இற்றைப்படுத்தப்படுகின்றன. ஆனாலும் அரசாங்கங்கள் மாற்றமடைகின்ற போது கொள்கைகள் தலைகீழாக மாற்றப்பட மாட்டாது.

இது முறைமை மாற்றத்துக்கான ஆரம்பம் மாத்திரமாகும். மேலும் பல மாற்றங்களை நாம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இலங்கையர்களின், விசேடமாக இளைஞர், யுவதிகளின் கருத்துக்கமைய அந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே, எதிர்வரும் 25 ஆண்டுகளுக்குள் நாம் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைக்குமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன். அந்தக் கோரிக்கையை இந்தச் சபையிலுள்ள உங்களிடம் மாத்திரம் நான் முன்வைக்கவில்லை. ஒட்டுமொத்த இலங்கையர்களிடத்திலும் முன்வைக்கின்றேன். நீங்கள் இலங்கையில் இருந்தாலும், வெளிநாடுகளில் இருந்தாலும் உங்களது கருத்துகளை முன்வைக்கவும். நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணையுங்கள்.

இன்று இந்த நாட்டிலுள்ள பலருக்கு இன்று நாடு அடைந்துள்ள நீளம் – அகலம் – ஆழம் புரிவதில்லை. அது நாம் அனைவரும் வாழ்நாளில் இவ்வாறான ஓர் அபாயத்தை மற்றும் பாரதூரமான நெருக்கடிக்கு முகம் கொடுக்காமையினாலாகும். இந்த நெருக்கடியிலிருந்து விரைவாக மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணையவேண்டுனெ நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், அறிஞர்கள், தொழில் வாண்மையாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், வியாபாரிகள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள், அரச சார்பற்ற அமைப்புகள் போன்ற அனைத்துத் தரப்பினர்களும் ஒன்றாக இணைதல் வேண்டும். குறிப்பிட்ட சில காலம் ஒரே நோக்கத்தில் ஒரே கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான முடிவுகள் எட்டப்படல் வேண்டும். சமூக இணக்கப்பாடு ஏற்படுத்தப்படல் வேண்டும். நாட்டுக்காக நம் அனைவரதும் வாழ்க்கைமுறைகளை மாற்றியமைத்தல் வேண்டும்.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட அனைத்துக் குழுக்களும் தற்போது தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். சுமைகளைத் தாங்குகின்றார்கள். இடர்களை எதிர்கொள்கின்றார்கள். ஆகவே, நாம் பொருளாதாரத்தை மீண்டும் மேலுயர்த்திய பின்னர் கிடைக்கும் நன்மைகள் அனைத்தையும் அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். அவர்கள் பொருளாதார அபிவிருத்தியின் சிறந்த பெறுபேறுகளின் பங்குதாரர்களாக அமைதல் வேண்டும்.

இந்த சமூக நீதியை நடைமுறைப் படுத்துவதற்காக நாம் சமூக நீதிக்கான ஆணைக்குழுவை தாபிக்க எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான புதிய கொள்கைச் சட்டகத்தை இந்த சமூக இணக்கப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு உருவாக்குவோம்.

இறுதியாக எனக்கு மற்றுமொரு விடயத்தை ஞாபகப்படுத்த முடியும். அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான வேறுபாட்டை நாம் புரிந்துகொள்வோம். இலங்கை அரசைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் கட்டுப்பட்டுள்ளோம். தேர்தல்களின்போது ஜனநாயக ரீதியில் அரசாங்கங்களை மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் உண்டு. ஆனாலும் இலங்கையை அராஜகமாக்கும் உரிமை ஒருவருக்கும் இல்லை. எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இல்லை. எந்தவொரு குழுவுக்கும் இல்லை.

எமது தாய்நாட்டை பொருளாதார அல்லது சமூக காலனித்துவமாக மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. அராஜக நிலைக்கு இட்டுச்செல்ல இடமளிக்க முடியாது. நாட்டை உண்மையாக நேசிக்கும் எந்தவொரு நபரும் அதற்கு இடமளிக்க மாட்டார்கள். நாம் அனைவரும் நாட்டை நேசிக்கும் தரப்பில் இருக்கவேண்டுமே தவிர, நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச்செல்லும் தரப்புடன் அல்ல.

இறந்தகால சிறைக் கைதிகளாக இல்லாமல் நாம் எதிர்காலம் பற்றிச் சிந்திப்போம். நாம் ஒன்றாக இணைவோம். பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருவோம். ஜனநாயக கருத்துகள் ஊடாக முன்னோக்கிச் செல்வோம். நாடு அடைந்துள்ள கவலைக்கிடமான நிலையில் இருந்து மீட்டெடுப்பதற்கு உயர்ந்தபட்ச ஒத்துழைப்பினை வழங்குவோம். அரசியல் நோக்கங்கள் பற்றி சிந்திக்க வேண்டுமாயின் நாட்டை இந்த நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்த பின்னர் அது பற்றி சிந்திப்போம்.

கௌதம புத்தபெருமான் இவ்வாறு போதித்தார்.

"நீங்கள் உங்களுக்கே விளக்காக இருங்கள்"

அந்த அறிவுரையினை ஏற்றுக்கொண்டு நாம் எமக்கே விளக்காக இருப்போம்.

அப்போதுதான் முழு நாட்டையும் வெளிச்சமாக்க முடியும்.

(முற்றும்)

# மலையகத் தமிழர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பு அவசியம்

## அமெரிக்க தூதுவரிடம் அமைச்சர் ஜீவன் கோரிக்கை

மலையகத் தமிழர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு அமெரிக்காவின் பங்களிப்பும் அவசியம். அதற்காக உரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் நேற்று முன்தினம் (07) பேச்சு நடத்தினார்.

நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு அமெரிக்கா வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு மலையக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்த ஜீவன் தொண்டமான், மலையக மக்களின் தற்போதைய நிலைவரம் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.



அத்துடன், மலையக மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

# தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு வேதனச் சீர்திருத்தம் வேண்டும்



## முதலாளிமார் சம்மேளனத் தலைவர் சேனக்க அலவத்தேகம வலியுறுத்து

22 பிராந்திய கம்பனிகளிலும் பதிவு செய்யப்பட்ட நிரந்தரத் தொழிலாளர்களாக ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேரே இருக்கின்றனர். எனினும் இவர்களைச் சார்ந்து தோட்டங்களில் வதியும் சுமார் பத்து இலட்சம் பேருக்கான வாழ்வாதாரத்தை நாம் வழங்கி வருகின்றோம். அதேவேளை, தொழிற்சங்கங்கள் கூறும் காலனித்துவ கால வேதன முறைமைகள் எவ்விதத்திலும் இக்காலத்துக்கு பொருந்தாது. எனவே நவீன காலத்துக்கு ஏற்ப வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வேதன முறைமைகளில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என முதலாளிமார் சம்மேளனத்தில் தலைவர் சேனக்க அலவத்தேகம தெரிவித்தார்.

ஒவ்வொரு தோட்டத் தொழிலாளிக்கும் நிலையான வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான ஊதிய சீர்திருத்தம் என்ற தலைப்பில் முதலாளிமார் சம்மேளன பிரதிநிதிகள் பங்கு கொண்ட வட்டமேசை அமர்வு அண்மையில் கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சம்மேளனத்தின் தலைமையத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி ரொஷான் ராஜதுரை உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். அங்கு தொடர்ந்து உரையாற்றிய சம்மேளனத் தலைவர்.

"கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட நெருக்கடிகளின் விளைவுகளுக்கு அனைவரும் முகங்கொடுத்து வருகின்றோம். பெருந்தோட்ட தொழிற்றுறை குறித்து எம்மீது பலரும் விமர்சனங்களை முன்வைத்தனர்.

இரசாயன உர மாபியாக்கள் என எம்மை விமர்சித்தனர். இப்போது அனைவருக்கும் நிலைமைகள் விளங்கியிருக்கும். உலகில் எந்த நாடும் 100வீத இயற்கை உர விவசாயத்துக்கு மாறவில்லை. எமது நாடு ஒரே இரவில் அவ்வாறு மாற முயற்சித்ததால் ஏற்றுமதி உற்பத்தியான தேயிலை மாத்திரமின்ற உள்ளூரிலேயே காய்கறி தட்டுப்பாடும் ஏற்பட்டது. அந்த பாதிப்பு இன்னும் தொடர்கின்றது.

தொழிலாளர்களின் நாட்சம்பளம் தொடர்பில் அனைவரும் கதைக்கின்றனர். கருத்துத் தெரிவிக்கின்றனர். அவர்களுக்கு அதிக வருமானம் தரக்கூடிய உற்பத்தி சார்ந்த முறைகள் குறித்து எவரும் பேசுவதில்லை. இதை தொழிற்சங்கங்களும் புரிந்து கொள்வதில்லை என்பது வேதனைக்குரியது. ஆனால் எமது பல தோட்டங்களில் இந்த உற்பத்தி சார்ந்த தொழிற்றுறை வெற்றியளித்துள்ளது.

கடந்த காலங்களில் நாம் முன்மொழிந்தவற்றுக்கு இந்த முறையை செயற்படுத்த எமக்கு ஆதரவு நல்கியிருந்தால் வேதன பேச்சுவார்த்தையில் அரசாங்கம் தலையிட வேண்டிய அவசியம் இருக்காது.

எனவே இக்காலத்துக்கேற்ப உலகில் தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகள் தொழிலாளர்களுக்கு வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் வழிமுறைகள் குறித்து நாம் ஆராய வேண்டியுள்ளது. இதற்கு தொழிற்சங்கங்கள் உட்பட அரசாங்கத்தினதும் ஆதரவு அவசியமாகும்." என தெரிவித்தார்.



புலமைப் பரிசில் பரீட்சையில் தங்கக்கலை இல.01 தமிழ் மகா வித்தியாலயத்தில் மூன்று மாணவர்கள் சித்திபெற்றுள்ளதுடன் 70 புள்ளிகளுக்கு அதிகம் பெற்று 88 வீத பெறுபேறு கிடைக்கப் பெற்றுள்ளது.

# ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

(தலவாக்கலை செய்தியாளர்)

கொட்டகலை ரொசிட்டா புகையிரத பாலத்திற்கு அருகில் நேற்று முன்தினம் (07) ஒருவர் புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளதாக திம்புள்ள - பத்தன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 55 வயதுக்குட்பட்ட ஒருவரே உயிரிழந்துள்ளதாகவும், அவரின் அடையாளம் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த உடரட்டமெனிக்கே புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்த நபரின் சடலம் அதே ரயிலில் ஹட்டன் ரயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு பின்னர் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள - பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




தைப்பூசத்தை முன்னிட்டு தலவாக்கலை ஸ்ரீகதிரேசன் சுவாமி தேவஸ்தான பால்குட பவனி, காவடி ஊர்வலம் ஆகியன லோகி பெரிய மல்லியப்பு வழிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதி வழியாக இடம்பெற்றன. (படப்பிடிப்பு: தலவாக்கலை செய்தியாளர்)



புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரி மாணவர்களான எம். கேசான் (141), எஸ். அகீல் (145), எவ். ருக்கய்யா (149), ஆர். அபூபக்கர் (152, அ.பிஸ்மா (158) ஆகியோரையும் வகுப்பாசிரியை ஆர்.எவ். நஸ்மினாவையும் படத்தில் காணலாம். (உக்குவளை செய்தியாளர்)

# வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் 24 மணி நேர பணிப்புறக்கணிப்பு : நோயாளர்கள் அவதி





(வவுனியா நிருபர்)

நியாயமற்ற வரிக் கொள்கை உள்ளிட்ட பல விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று (08) காலை 8.00 மணி தொடக்கம் 24 மணித்தியாலய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட் டுள்ள நிலையில், நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

சுகாதாரம், மின்சாரம், துறைமுகம், பெற்றோலியம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம் உள்ளிட்ட 40இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று (08) எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. தொழிற்சங்கங்களின் எதிர்ப்புத் தினத்திற்கு ஆதரவளித்து 24 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருந்ததுடன், அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் 24 மணித்தியால பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும் அவசர நோயாளர் பிரிவு, நோயாளர் விடுதி, விபத்துப் பிரிவு, சத்திர சிகிச்சை பிரிவு உட்பட்ட சில சேவைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வைத்தியர்கள் ஈடுபடுவதுடன், வெளிநோயாளர் பிரிவு , கிளினிக் பிரிவு போன்ற ஏனைய சேவைகளிலிருந்து வைத்தியர்கள் முற்றாக 24 மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக கிளினிக், வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றுக்கு வருகை நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

# கல்வியங்காடு மீன் சந்தை வியாபாரிகள் 13 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை



(யாழ். நிருபர்)

கல்வியங்காடு மீன் சந்தையில் அங்கீகரிக்கப்படாத, நிறுக்கும் கருவியை (தராசு) பயன்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்ட 13 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு மீன் சந்தையில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளைப் பரிசோதித்தபோது, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்படாத, வியாபாரத்திற்கு பயன்படுத்தமுடியாத 13 நிறுக்கும் கருவிகளை வியாபாரிகள் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட திணைக்களத்தினரால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றுவரும் ஒன்றுகூடல் விசேட உரை நிகழ்வில் நேற்று (08) காலை யாழ். போதனா வைத்தியசாலையின் சமுதாய மருத்துவத்துறை வைத்தியப் பதிவாளர் டாக்டர் கே.என்.பரமேஸ்வரன் நேருள மனப்பாங்கு என்ற பொருளில் கருத்துரை வழங்கினார். கருத்துரையாற்றிய வைத்தியர் பரமேஸ்வரன், கலாசாலை அதிபர் மற்றும் பிரதி அதிபர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# பசுமைப் பொருளாதாரத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு பான் கி மூன் ஆதரவு





காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து, பசுமைப் பொருளாதாரத்தை ஏற்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக ஐ.நாவின் முன்னாள் செயலாளர் பான் கி மூன் தெரிவித்துள்ளதாக, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஐ.நா. முன்னாள் செயலாளர் நாயகமும், உலக பசுமைப் பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தின் தலைவருமான பான் கி மூனுடன் விசேட சந்திப்பில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

காடுகளைப் பாதுகாப்பதில் ஏனைய கைத்தொழில் நாடுகளைவிடவும் இலங்கை முன்னணியில் உள்ளது. நாட்டில் 32 வீதமான பசுமைக் காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியுடன் உள்ளார். உயிர்ப் பல்வகையைப் பாதுகாக்கும் பிரதான திட்டங்களில் காடுகளைப் பாதுகாப்பது பிரதான பங்கு வகிக்கிறது.

இது மட்டுமன்றி, காலநிலையைப் பாதுகாப்பதில் காடுகளின் பங்களிப்புகள் இன்றியமையாததாகிவிட்டன. இத்தகைய பெறுமதிமிக்க காடுகள் கைத்தொழில் புரட்சிகளால் அழிக்கப்படுகின்றன. இதைப் பாதுகாப்பது அவசியம்.

இதற்கான ஏற்பாடுகளில் சுற்றாடல் அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது. காடுகளைப் பாதுகாக்கும் செயற்றிட்டங்களை வடிவமைத்து ஒப்படைத்தால், அதற்கான நிதியுதவிகளை, உலக பசுமைப் பொருளாதார வளர்ச்சி நிறுவனம் வழங்கும் என்றும் எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# புற்றுநோய்க்கான 43 வகை மருந்துகள் இறக்குமதி

பற்றாக்குறையாகக் காணப்பட்ட புற்றுநோய்க்கான 43 வகையான மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள இந்த மருந்துப் பொருட்களை சுங்கப் பிரிவினர் தற்போது சோதனைக்கு உட்படுத்தி வருவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட் டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் இந்த மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதனிடையே, நாட்டில் தட்டுப்பாடாகவுள்ள 140 வகையான மருந்துப் பொருட்களுக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவற்றை இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மூத்த சகோதரனை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை

## 14 வயது இளைய சகோதரன் கைது



களுத்துறை, தேக்கவத்தை, பலதொட்ட பிரதேசத்தில் தனது மூத்த சகோதரனை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலைசெய்த சந்தேகத்தின் பேரில் 14 வயது இளைஞனை பொலிஸார் நேற்று (08) கைதுசெய்துள்ளனர்.

தாக்குதலின்போது படுகாயமடைந்த மூத்த சகோதரர் நாகொட களுத்துறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இறந்தவர் தனது இளைய சகோதரருடன் வீட்டில் இருந்ததாகவும், அவர்களின் தாய் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சையில் இருக்கும் தனது கணவரைப் பார்க்கச் சென்றதாகவும் கடும் வாக்குவாதம் காரணமாக 14 வயது இளைஞன் கழுத்தில் கூரிய ஆயுதத்தால் சகோதரனை தாக்கியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த அனுருத்த தனஞ்சய டி சில்வா, முச்சக்கரவண்டி சாரதியாக கடமையாற்றிய 26 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



**நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் நனையா மடா இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட ஆகியோர் புதுடில்லியில் சந்தித்து, இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப் படுத்தல் குறித்து பேச்சு நடத்தினார்.**

# மொனராகலையில் வீடுடைத்துக் கொள்ளை

## 06 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு

(கெலும் குணதிலக்க)

மொனராகலை, குமாரதொலபர பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (07) இரவு சுமார் ஆறு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஜன்னல் வழியாக வீட்டுக்குள் நுழைந்த திருடன் அறையில் இருந்த அலுமாரியை உடைத்து அங்கிருந்த தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மொனராகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமரகீர்த்தி அத்துகோரளவை கொலை செய்ததாக கைதான சந்தேக நபர் புற்றுநோயால் உயிரிழப்பு

## மஹரகம அபெக்‌ஷா வைத்தியசாலையில் சம்பவம்

பொலன்னறுவை மாவட்ட ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவை கடந்த மே மாதம் 9ஆம் திகதி தாக்கி கொலை செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் இராணுவச் சிப்பாய் மஹரகம அபெக்‌ஷா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், உயிரிழந்துள்ளதாக நிட்டம்புவ தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிட்டம்புவ எல்லக்கல பிரதேசத்தைச் சேர்ந்த ஹெந்தவிதாரண நிபுன புத்திக என்ற 26 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

இரகசிய பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் மஹர விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் நிலையில், மஹர சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் மஹரகம அபெக்‌ஷா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர் உயிரிழந்ததாக அப்பகுதியின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# முச்சக்கரவண்டி விபத்தில் 9 மாத குழந்தை உயிரிழப்பு

## குருநாகலில் சம்பவம்

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநாகல் வெவ ரவும வீதியில் இடம்பெற்ற விபத்தில் 9 மாத ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

பன்தம்பலாவ பகுதியிலிருந்து பமுனுகெதர நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தொலைபேசி கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி மற்றும் நான்கு பயணிகளும் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன், அவர்களில் 9 மாத குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

குருநாகல், பமுனுகெதர பிரதேசத்தைச் சேர்ந்த சிலரே இந்த விபத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

# வேலை நேரத்தில் மசாஜ் நிலையத்துக்குச் சென்ற கான்ஸ்டபிள் இருவரின் பணி இடைநிறுத்தம்

பேலியகொட தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் வேலை நேரத்தில் மசாஜ் நிலையத்துக்குச் சென்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் (07) பணி இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டு களனி உதவிப் பொலிஸ் அத்தியட்சகரால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் அனுமதியின்றி பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேறி, இந்த மசாஜ் நிலையத்திற்கு சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் 119 அவசர சேவைப் பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பேலியகொட தலைமையக அதிகாரிகள் குழுவொன்று மசாஜ் நிலையத்தை சுற்றிவளைத்தபோது இரண்டு பெண்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதாகக் கூறப்பட்ட இருவரும் தப்பிச்சென்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

தப்பியோடிய இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு திரும்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.



**இலங்கையிலுள்ள துருக்கி தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்னல் சர்வெட் ஒகுமஸ் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் சுதர்சன பத்திரனவை கடந்த திங்கட்கிழமை (06) விமானப்படைத் தலைமையகத்தில் சந்தித்தார்.**

# வழக்குப் பொருட்கள் களஞ்சிய அறையிலிருந்த ரூ. 68 இலட்சம் பெறுமதியான நகைகள் திருட்டு

## கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்ற இலிகிதர் கைது

கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றின் பிரதான வழக்குப் பொருட்கள் களஞ்சிய அறையில் இருந்த 68 இலட்ச ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்க நகைகள் காணாமல்போன சம்பவம் தொடர்பில், அந்த அறையின் பாதுகாவலராக இருந்த நீதிமன்ற இலிகிதர் ஒருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

குறித்த வழக்குப் பொருட்கள் காணாமல்போன வேளையில் இந்த சந்தேகநபர் பிரதம நீதவான் நீதிமன்றத்தின் வழக்குப் பொருட்கள் களஞ்சிய அறையின் பாதுகாவலராக கடமையாற்றியதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை நேற்று (08) கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# பயணிகள் பஸ்களில் ஏறி பணம் பெற்று மோசடி

## 19 வயது இளைஞர் கைது

பயணிகள் பஸ்களில் ஏறி பணம் பெற்று மோசடி செய்த 19 வயது இளைஞரை காலி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டபோது, கடலில் நீந்தி தப்பிச் செல்ல முற்பட்டபோதே குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இதன்போது உடனடியாக செயற்பட்ட அருகில் கடமையில் இருந்த போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கடலில் நீந்திச் சென்று சந்தேக நபரைக் கைதுசெய்தார்.




**Content Writer**

Company: DCI Recruitment (Pvt) Ltd
*Email: sahan@dci.lk*

**Translator – (Chinese-English/Sinhala)**

Company: Asset Engineering (PVT) Ltd.
*Email: cv@assetengineering.lk*

**Manager - Human Capital**

Company: BDO Partners
*Email: ashane@bdo.lk*

**HR Executive (Training and Development)**

Company: Pyramid Lanka
*Email: careers@pyramidwilmar.com*

**IT Administrator**

Company: Emerald Isle
Email: hreimts1@gmail.com

**Customer Care Officer**

Company: Singhagiri PVT Ltd
Address: Head of Human Resources, Singhagiri PVT Ltd, 515, Darley Road, Colombo 10.

**Planter Trainees**

Company: Hayleys Group
*Email: hr@ttel.hayleys.com*

**Resident Manager (Hotel)/Legal cum Admin. Officer**

Company: Orion Development (PVT) Ltd
Address: General Manager, Orion Development (PVT) Ltd, No: 752, Dr. Danister De Silva Mawatha, Colombo 09. *Asstacc1@orioncity.lk*

**Accountant**

Company: Solico International Pvt Ltd
*Email: secretary@solicolk.com*

**Ticketing Executives/Accounts Clerk/ Clerk/ Office Cleaner**

Company: Ajma Travels Pvt Ltd.
Address: No 22, Dias Place, Gunasinghepura, Colombo 12.

**Marketing Executive / Office Co-ordinator / Graphic Designer**

Company: Hammer Digital
Contact: 011 2883875/0777 756976

# நானுஓயா ரதல்ல குறுக்குப் பாதையில் 5 தொன்களுக்குக் குறைவான எடையுள்ள வாகனங்கள் மட்டும் பயணிக்க அனுமதி

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் ரதல்ல குறுக்குப் பாதையின் ஊடாக 5 தொன்களுக்கும் குறைவான எடையுள்ள வாகனங்கள் மட்டும் பயணிக்க, நேற்று (8) முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி அந்த வீதியில் பஸ்ஸொன்று வேன், முச்சக்கரவண்டி ஒன்றை மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்ததுடன், 53 பேர் காயமடைந்தனர்.

இதனால் கனரக வாகனங்களுக்கான குறித்த குறுக்குப்பாதை தற்காலிகமாக மூடப்பட்டது.

எவ்வாறாயினும், வாகனப் போக்குவரத்து தொடர்பாக ரதல்ல குறுகிய பாதையை மேற்பார்வையிட பல போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கிழக்கில் தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பு

# வைத்தியசாலைகளும் முடக்கம்: நோயாளர்கள் பெரும் அவதி!

(காத்தான்குடி, மூதூர், கிண்ணியா, சீனக்குடா செய்தியாளர்கள்)

நாடளாவிய ரீதியில் அனைத்து தொழிற் சங்கங்களும் நேற்று புதன்கிழமை (08) முன்னெடுத்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவாக கிழக்கு மாகாண வைத்தியசாலை வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு வைத்தியசாலைகளில் வைத்தியர்களின் வேலைநிறுத்தத்தினால் வெளிநோயாளர்கள் பிரிவு உட்பட அனைத்துப் பிரிவுகளும் முற்றாக முடங்கியிருந்த அதேவேளை, அவசர நோயாளர் பிரிவு மாத்திரம் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் காத்தான்குடி, திருகோணமலை, மூதூர், கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆலங்கேணி, நடு ஊற்று, கச்சக்கொடித்தீவு ஆகிய வைத்தியசாலையின் வைத்தியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக தூரப் பகுதிகளிலிருந்து வைத்தியசாலைக்கு வைத்திய சேவையை பெறுவதற்காக வருகைதந்த நோயாளர்கள் வைத்தியரை சந்திக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. அதேவேளை, மாதாந்த சிகிச்சை பெறுவோர், உடன் சிகிச்சை பெறுவோர் என பலரும் வைத்தியசாலைகளில் கூடி நின்றிருந்தனர். பலர் சிகிச்சை பெற முடியாமல் திரும்பிச் சென்றனர்.




இன்னும் சில வைத்தியசாலைகள் நோயாளிகளின்றி வெறிச்சோடிக் கிடந்ததையும் அவதானிக்க முடிந்தது. இவ்வாறு வைத்தியசாலையில் வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு என்றால் எமது நோய்க்கு எவ்வாறு வைத்தியம் பார்ப்பது என்று நோயாளிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் முச்சக்கரவண்டிகளுக்கு அதிக பணம் செலுத்தி வைத்தியசாலைக்கு வந்தால் வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு நடந்தால் நாங்கள் எங்கு போவது? நேரத்துக்கு தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டோம். அரசாங்கம் வைத்தியர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுத்தால்தான் எமக்கு விடிவு கிட்டும் என்றும் நோயாளிகள் பெரிதும் அங்கலாய்த்தனர்.

## ஐக்கிய மக்கள் சக்தி தலைமை வேட்பாளரது கடைக்கு சேதம்

(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அக்கரைப்பற்று மாநகர சபையின் தலைமை வேட்பாளரும், தொழில்நுட்பக் கல்லூரி வட்டாரத்தில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட அமைப்பாளருமான எம்.ஐ.ஏ.ஆர். புஹாரியின் கடை நேற்று (08) அதிகாலை சேதமாக்கப் பட்டுள்ளது.



அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையில் பிரதான வீதியில் அமைந்துள்ள பெஷன் ஹவுஸ் என்ற கடையின் மேற்கூரையை உடைத்து உள் நுழைந்தவர்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பாதணிகள், பொருட்கள் மற்றும் கண்ணாடிகளை உடைத்து நொறுக்கி சேதமாக்கியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ள வேளையில் இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## அரசின் வரி அறவீட்டுத் திட்டத்துக்கு எதிரான அமைதிப் பேரணி



(வி.சுகிர்தகுமார்)

அரசின் வரி அறவீட்டு திட்டத்திற்கு எதிராக அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் தமது எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையில் அமைதிப் பேரணி அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்று(08) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று கொமர்ஷியல் வங்கியின் முன்பாக ஒன்றிணைந்த அவர்கள் அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியூடாக சென்று மணிக்கூட்டுக்கோபுரத்தை அடைந்து அங்கு சில நிமிடங்கள் தரித்து நின்று தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இதன்போது பல்வேறு சுலோக அட்டைகளையும் ஏந்தியவாறு வங்கி ஊழியர்களின் சம்பளம் மீதான வரி விதிப்பிற்கு எதிராக குரல் கொடுத்தனர். இதேநேரம் தமது கருத்துகளையும் ஊடகங்களுக்கு வழங்கினர். பின்னர் அங்கிருந்து மீண்டும் ஊர்வலமாக கொமர்சியல் வங்கி வரை ஊர்வலமாக சென்று தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

## சாய்ந்தமருது அல்-ஹிலாலில் 44 மாணவர்கள் சித்தி



(பொலிவேரியன் செய்தியாளர்)


கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஹிலால் வித்தியாலயத்திலிருந்து தோற்றியோரில் 44 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக அதிபர் யூ.எல்.நஸார் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றிய 244 மாணவர்களில் 232 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இது 95.6 சதவீதமாகும். இதனைப் பாராட்டும்வகையில் கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளரும் பாடசாலை எஸ்டிஈசீஇன் செயலாளருமான ஏ.எம்.சாஹிர், சாய்ந்தமருது கோட்ட வலயத்தை மூன்றாம் இடத்துக்கு உயர்த்துவதற்கு கைகோர்த்து உழைத்த கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.மலீக், முன்னாள் அதிபர் மஜீத் ஆகியோரின் பங்குபற்றலுடன் 70 புள்ளிகளுக்கு மேல்பெற்ற அனைத்து மாணவர்களும் பாராட்டப்பட்டனர்.

இதன்போது வலயக்கல்விப் பணிப்பாளர் சௌதுல் நஜீமுக்கு அதிபர் நன்றி தெரிவித்தார்.

இதேவேளை, இதற்காக உழைத்த பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார் மற்றும் பிரதி அதிபர் நுஸ்ரத் பேகம், உதவி அதிபர் ஐனூல் மர்சுனா, பகுதித் தலைவர்களான கே.எல்.ஜஃபர், சியானா நௌசாத், புலமைப்பரிசில் கற்பித்த ஆசிரியர்கள், வகுப்பாசிரியர்கள் ஆகியோருக்கு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

## நிலநடுக்கத்தில் உயிரிழந்த பிரபல உதைபந்து வீரர்




துருக்கியை மொத்தமாக புரட்டிப்போட்ட நில நடுக்கத்தில் சிக்கி தேசிய உதைபந்து அணியின் பிரபல வீரர் ஒருவர் பரிதாபமாக பலியான தகவல் வெளியாகியுள்ளது.

துருக்கி அணியின் கோல்கீப்பராக செயற்பட்டு வந்தவர் 28 வயதான அஹ்மத் ஐயுப் டர்கஸ்லான். நிலநடுக்கத்தை தொடர்ந்து அவர் மாயமானதாக தகவல் வெளியானது. ரிச்டர் அளவில் 7.8 என பதிவான நிலநடுக்கத்தை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் கட்டிட இடிபாடுகளில் சிக்கி மரணமடைந்தனர். ஆயிரக்கணக்கானோர் மீட்பு நடவடிக்கைகளிலும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இடிபாடுகளின் நடுவே அஹ்மத் ஐயூப் டர்கஸ்லானின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அஹ்மத் ஐயூப் டர்கஸ்லானின் மறைவுக்கு சக கால்பந்து வீரர்கள் மற்றும் நண்பர்கள் பலர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இதனிடையே திங்களன்று அஹ்மத் ஐயூப் டர்கஸ்லானின் மனைவியை உயிருடன் மீட்டுள்ளதாகவும் இறுதி வரையில் போராடியும் அஹ்மத் ஐயூப் டர்கஸ்லானின் உயிரை காப்பாற்ற முடியவில்லை எனவும் அவசர மருத்துவ உதவிக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## வெற்றிகரமாக நிறைவடைந்த SPL கிரிக்கெட் சுற்றுப்போட்டி




கொட்டகலை ஸ்டேலிங் பிரிவுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளின் உள்ளார்ந்த திறமைகளை ஊக்குவிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த SPL கிரிக்கெட் தொடரில் சமூகசேவகர் ரொஹான் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

அத்தோடு சிறந்த மென்பந்து கிரிக்கெட் அணியை உருவாக்க வேண்டும் என்ற முயற்சியில் அணிக்கு ஏழு பேர் பங்குகொண்ட மென்பந்து கிரிக்கெட் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி சிறப்பான உள்ளூர் வீரர்களை இனங்கண்டதோடு அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதன்மூலம் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் சிறப்பு நான்கு அணிகள் தெரிவுசெய்யப்பட்டன.

இரண்டு பிரிவுகளிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த அணிகள் அரையிறுதிப் போட்டியில் பங்குபற்றி இறுதிப் போட்டிக்கு IPL முறையில் தெரிவுகள் இடம்பெற்றன.

SPL ஏற்பாட்டாளர் ஜெகனின் வழிகாட்டலினூடாக நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் A குழுவில் SS Boys மற்றும் Junior Brademan அணிகளும் B குழுவில் Staff மற்றும் SPL அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இறுதிப்போட்டியில் SS Boys மற்றும் SPL அணிகள் பலப்பரீட்சையில் மோதி இரண்டாவது முறையாக இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியிலே SS Boys அணியினர் வெற்றிவாகை சூடினர். வெற்றிபெற்ற அணிகளுக்குப் பெறுமதியான கிண்ணங்கள் வழங்கப்பட்டதோடு யுவதிகளுக்கான கண்காட்சி கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றமை சிறப்பம்சமாகும்.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு 'DON BRADMAN CRICKET ACADEMY' மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(நிந்தவூர் நிருபர்)

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 'DON BRADMAN CRICKET ACADEMY' ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை கிரிக்கெட் சுற்றுப்போட்டி சாய்ந்தமருது கடற்கரை பௌசி ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களையும்



சேர்ந்த முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றியிருந்தன. அம்பாறை மாவட்ட செயலக விளையாட்டு உத்தியோகத்தரும் 'DON BRADMAN CRICKET ACADEMY' நிறுவனத்தின் தலைவருமான ஏ.எம்.றிஷாட் தலைமையில் இடம்பெற்ற சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை சிரேஷ்ட நிர்வாக அதிகாரியும் முன்னாள் சாய்ந்தமருது பிரதேச செயலாளரும் இலங்கை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீம் கலந்துகொண்டார்

விசேட அதிதிகளாக முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் இஷட்.எம் ஸாஜீத் மற்றும் சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைவர் முஹம்மது நிஜாமுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




## உக்குவளை ரேஞ்ஜர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட போட்டியில் புலூ மாஸ்டர் சம்பியன்



(உக்குவளை நிருபர்)

உக்குவளை ரேஞ்ஜர்ஸ் விளையாட்டுக் கழகம், கழகங்களுக்கிடையில் நடத்திய உதைபந்தாட்ட விளையாட்டுப்போட்டி உக்குவளை யாலேகம விளையாட்டுத் திடலில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது புலூ மாஸ்டர் அணியும் யெலோ மாஸ்டர் அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் புலூ மாஸ்டர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதன்போது இவ்வணியின் சார்பாக விளையாட்டு வீரர் ரியாஸ் தாஜுதீன் நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்ட விளையாட்டு இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்கவிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றார்.

## உலகக்கிண்ண நூற்றாண்டு விழாவை நடத்த தென் அமெரிக்கா ஆர்வம்

(ரமணி)

உலகக்கிண்ண உதைபந்தாட்ட நூற்றாண்டு விழாவை நடத்துவதற்கு ஆர்ஜென்ரீனா, சிலி, உருகுவே, பராகுவே ஆகியவை அதிகாரப்பூர்வ கூட்டு முயற்சியை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தன. 2030ஆம் ஆண்டு உலகக்கிண்ண நூற்றாண்டு விழா நடைபெறவுள்ளது. 1930ஆம் ஆண்டு உருகுவேயில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனாவை எதிர்த்து விளையாடிய உருகுவே 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

2030ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை இணைந்து நடத்துவதற்கு ஆர்ஜென்ரீனாவும்இ உருகுவெயும் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் அறிவித்தன. இப்போது சிலி, பரகுவே ஆகிய நாடுகளும் இணைந்துள்ளன.

"முதல் உலகக் கிண்ணத்தை ஏற்பாடு செய்தவர்களின் நினைவை போற்றவேண்டிய கடமை பீபாவுக்கு உள்ளதென்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்" என்று கான்மெபோல் தென் அமெரிக்க கூட்டமைப்பின் தலைவர் அலெஜான்ட்ரோ டொமிங்குஸ் ஆர்ஜென்ரீனாவில் கூறினார். ஸ்பெயின்,




போர்த்துக்கல், உக்ரைன் ஆகிய நாடுகளும் 2023 உலகக் கிண்ணப் போட்டியை நடத்த விரும்புகின்றன. இதேவேளை, சவூதி அரேபியா, எகிப்து, கிரீஸ் ஆகிய நாடுகள் போட்டியில் இணைந்துள்ளன.

உருகுவே 1930இல் மான்டிவீடியோவில் நடத்திய 13 அணிகள் கொண்ட உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் ஆர்ர்ஜென்ரீனாவை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி முதல் உலக சம்பியனானது. கடந்த ஆண்டு கட்டாரில் நடந்த போட்டியில் பிரான்ஸை வீழ்த்திய ஆர்ஜென்ரீனா நடப்பு சாம்பியனாக உள்ளது. அடுத்த உலகக் கிண்ணப் போட்டி 2026இல் அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா ஆகிய நாடுகள் இணைந்து நடத்தவுள்ளன.

# கல்வியியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ, இஸ்லாம் பாடத்திற்கு மாணவர்களை உள்ளீர்ப்பதில் அநீதி

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நீதிக்கான மய்யம் முறைப்பாடு



(எஸ்.அஷ்ரப்கான்)

கல்வியியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் பாடத்திற்கு குறிப்பாக அட்டாளைச்சேனை, வவுனியா கல்வியியற் கல்லூரிகளில் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் பாடத்திற்கு மாணவர்களை உள்ளீர்ப்பதில் அநீதி இழைக்கப்பட்டமைக்கு எதிராக கல்வி அமைச்சின் செயலாளருக்கு நீதிக்கான மய்யம் கொழும்பிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று(08) முறைப்பாடொன்றினை செய்துள்ளது.

இம்முறைப்பாட்டை நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி சஹ்பி எச்.இஸ்மாயில், சிரேஷ்ட சட்டத்தரணி சுகந்திகா பெர்னாண்டோ, நீதிக்கான மய்யத்தின் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் யூ.கே.எம்.றிம்சான் ஆகியோர் இணைந்து செய்துள்ளனர்.

# நோயாளியின் தங்க ஆபரணத்தை திருடிய சிற்றூழியருக்கு விளக்கமறியல்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த நோயாளியின் தங்க ஆபரணத்தை திருடிய குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட வைத்தியசாலை சிற்றூழியரை 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நோயாளர்களை அனுமதிக்கும் அறையில் கடமையாற்றி வந்த சிற்றூழியர் பாதிக்கப்பட்ட பெண் அணிந்திருந்த தங்க ஆபரணத்தை கழற்றி பையில் வைக்குமாறு கூறியதையடுத்து குறித்த பெண் ஆபரணத்தை கழற்றி தனது பையில் வைத்துள்ளார்.

அவ்வேளையிலேயே திருட்டுப் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தலைவலி மற்றும் தலைச்சுற்று காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த பாலையூற்று பகுதியைச் சேர்ந்த புஷ்பராசா நிர்மலா, தனது தங்க ஆபரணத்தை சிற்றூழியர் திருடியதாக முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, குறித்த பையில் இருந்த தங்க ஆபரணத்தை திருடியதாகவும் இதனையடுத்து நோயாளி சிற்றூழியரிடம் கேட்டபோது தான் எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட துறைமுக பொலிஸார் திருடப்பட்ட தங்க ஆபரணத்தை கைப்பற்றியதாகவும் தெரிய வருகின்றது. குறித்த நோயாளியின் தங்க ஆபரணத்தை திருடிய சிற்றூழியரான பொலன்னறுவை பழுதெனிய பகுதியில் வசித்துவரும் நான்கு பிள்ளைகளின் தாயாரான ரத்நாயக்க முதியன்சலாகே மதுமாலி ரத்னாயக்க (31 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த வைத்தியசாலை சிற்றூழியரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இவ்வாறு 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கட்டளையிட்டார்.

# அபராதம்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று சாகாம வீதியில் சமாதானத்தை சீர்குலைத்த குற்றத்திற்காக பொலிஸாரினால் மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் மூன்று சந்தேக நபர்களை கைதுசெய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று (08) ஆஜர்படுத்தியபோது ஒவ்வொருவருக்கும் தலா 3000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

தண்டப்பணம் செலுத்திய பின் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நகை திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 பவுண் தங்க நகைகள் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதவான் செவ்வாய்க்கிழமை(07) உத்தரவிட்டார்.

பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 34 மற்றும் 38 வயதுடைய இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் கந்தளாய் வான் எல பகுதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்து பதினைந்து பவுண் நகைகளை திருடி நகைக் கடைகளுக்கு விற்பனை செய்து வந்த நிலையில் சந்தேக நபர்கள் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் கைதுசெய்து கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போடியார் புலம்பல்!



தில் இருந்தால் எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல நடத்திப்பாருங்க எண்டு எதிர்க்கட்சிகள் எல்லாமே சொல்லுறாங்க எலுவா? காசி இருந்தா நடத்திப்பாருங்க எண்டு ஆளும் கட்சிக்காரர்கள் கேட்டாலும் கேட்பாங்க. இது எல்லாத்துக்கும் நல்ல முடிவ நீதிமன்றம்தான் தீர்ப்பு சொல்லப்போகுது. நாளைக்குத்தான் தேர்தல் நடக்குமா இல்லையா எண்ட சங்கதி தெரியப்போகுது எண்டது மட்டும்தான் மெய்!

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியலமைப்புத் திருத்தம் முஸ்லிம் சமூகத்திற்கு பாதிப்பாக அமைந்துவிடக் கூடாது

## கல்முனை முதல்வர் றகீப் வலியுறுத்து

(சாய்ந்தமருது செய்தியாளர்)



நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எந்தவொரு அரசியலமைப்புத்திருத்தமும் முஸ்லிம் சமூகத்திற்கு பாதிப்பாக அமைந்துவிடக்கூடாது என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் வலியுறுத்தியுள்ளார்.

கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த 75ஆவது தேசிய சுதந்திர தின விழா மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் கல்முனை வாசலில் நடைபெற்றபோது பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்ற மிகவும் கடினமான ஒரு காலகட்டத்தில் தாய்நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். இந்த நாட்டில் சிறுபான்மையினர் மீதான பாரபட்சங்கள் தொடர்கின்ற நிலையில் சிறுபான்மைச் சமூகத்தினர் நாட்டின் சுதந்திர தினத்தைக் கொண்டாடத்தான் வேண்டுமா என்று சிலர் கேள்வி எழுப்புவதைக் காண முடிகிறது. ஆனால் சுதந்திர தினக் கொண்டாட்டம் என்பது ஆட்சியாளர்களுக்கானதோ அல்லது பெரும்பான்மை சமூகத்தினருக்கானதோ அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் சுதந்திரத்திற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் ஒன்றிணைந்தே போராடினார்கள். அதுவே நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுத்தந்தது. இலங்கை திருநாடானது சிறுபான்மையினராகிய எமக்கும் சொந்தமான தேசமாகும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதை நாங்கள் விட்டுக்கொடுக்க முடியாது.

இன்றைய நாட்களில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது பற்றியும் அதிகம் பேசப்படுகிறது. நாட்டின் பொருளாதார மீட்சிக்காக சர்வதேசத்தின் உதவியை நாடி நிற்கின்ற எமது அரசாங்கம், அதன் அழுத்தங்களுக்கு உட்பட்டே சில விடயங்களை செய்வதற்கு முனைப்புக் காட்டுவதாக அறிய முடிகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு அநீதியிழைத்து விடக்கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும் - என்றார்.

# உலக உணவுத் திட்ட உயரதிகாரிகள் மட்டு. அரச அதிபருடன் கலந்துரையாடல்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்கஅதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் உலக உணவுத் திட்ட அவசரநிலை இணைப்பாளர் ஜோஸ்பன்ட் முஸோங்காவுடனான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நேற்று(08) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 6 பிரதேச செயலகங்களில் போதிய வருமானமற்றவர்களுக்கு உலக உணவுத் திட்டம் மற்றும் வேல்ட் விஷன் ஆகிய அமைப்புகள் இணைந்து கடந்த காலங்களில் உலருணவுப் பொருட்களை வழங்கினர்.

60 நாட்களைக்கொண்ட உலக உணவுத் திட்டத்தின் உலருணவுப் பொதிகள் வழங்கல் செயற்பாட்டின்போது எதிர் கொண்ட சவால்கள், பிரச்சினைகள் மற்றும் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் தொடர்பாக அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள், நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், சமுர்த்திப் பயனாளிகள், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட குடும்பங்கள், குறைந்த பொருளாதார வசதியுடைய குடும்பங்கள் என்ற வகையில் கிராம உத்தியோகத்தர்களால் தெரிவுசெய்யப்பட்ட நபர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

உலக உணவுத் திட்டத்தின் உயரதிகாரி கீரன் பொல், மட்டக்களப்பு மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார், உலக உணவுத் திட்டம் நிகழ்ச்சி திட்ட உதவியாளர் திருமதி பத்மரஜனி கேதீஸ்வரன், வேர்ல்ட் விஷன் அதிகாரி எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தொழுநோய் ஒழிப்பு மாநாடு திருகோணமலையில்...





தொழுநோய் ஒழிப்பு தொடர்பான பிராந்திய மாநாடு ஜனவரி 30ஆம் திகதி திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தை சேர்ந்த அதிகாரிகள், ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் ADT பிரதிநிதிகள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த சர்வமதத் தலைவர்கள் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இம்மாநாட்டின்போது தொழுநோய் சிகிச்சைக்கான அணுகலைச் சுற்றியுள்ள சிக்கல்கள் மற்றும் நோயாளர்கள் முகம்கொடுக்கும் சிரமங்கள் உட்பட பல பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.

மேலும், அலுவலகங்களில் உள்ள இவ்வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துவது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்தோடு, தொழுநோயை எதிர்த்துப் போராடும் முயற்சிகளுக்காக ADT நிறுவனம் அரசாங்க அதிகாரிகளால் பாராட்டப்பட்டது.

இம்மாநாட்டின்போது கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டி.ஜி.எம். கோஸ்டா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், டாக்டர் வி. பிரேமானந்த், மாகாண தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர். எஸ். அருள்குமரன், திருகோணமலை மாவட்ட மேல் அரசாங்க அதிபர், பணிப்பாளர், ஐக்கிய அபிவிருத்தி நிதியம் ரகு பாலச்சந்திரன், ஐக்கிய அபிவிருத்தி நிதியம் கிழக்கு பிராந்திய முகாமையாளர் ஜெபசுதன் செல்வரெட்ணம் மற்றும் ஐக்கிய அபிவிருத்தி நிதியம் திருகோணமலை மாவட்ட அதிகாரி பி.சிவக்குமார் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

# வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பு

## ஏறாவூரில் ஆர்ப்பாட்டம்

(ஏறாவூர் நிருபர்)



வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பிரதேசத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் செவ்வாய்க்கிழமை (07) மேற்கொள்ளப் பட்டது. இதையடுத்து ஆர்ப்பாட்டக் காரர்கள் ஏறாவூர் மண்ணில் தரிக்காது மட்டக்களப்பு நகரம் நோக்கி பயணம் செய்தனர்.

சமூக செயற்பாட்டாளர் ஏ.எம்.பிர்தௌஸ் தலைமையில் ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. கவனயீர்ப்புப் போராட்டக்காரர்கள் தேசியக் கொடியை ஏந்தியவாறு மௌனமாக தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

முப்பது பஸ்களில் வடமாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணம் நோக்கி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு முதலான பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சிவில் சமூகம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறப்பிடத்தக்கது.

# குர்ஆன் கலாசாலையின் கௌரவிப்பு நிகழ்வு





(மீராவோடை செய்தியாளர்)

ஓட்டமாவடியில் இயங்கிவரும் மத்தரஸது ஸைத் பின் தாபித் பகுதிநேர குர்ஆன் கலாசாலையின் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு செவ்வாய்க்கிழமை (07) இடம்பெற்றது.

கலாசாலையின் அதிபர் அல்-ஹாபிழ் ஏ.எல்.நிஜாம்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கலாசாலையினால் நடத்தப்பட்ட பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், குறுகிய நாட்களில் அதிகூடிய வரிகளை மனனம் செய்த மாணவர்கள் மற்றும் விடுமுறை எடுக்காமல் தொடர்ச்சியாக கலாசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் எனப் பலரும் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# விசேட தேவையுடையவர்கள் தொழில் பயிற்சியில் இணைப்பு



(கிண்ணியா செய்தியாளர்)

சமூக சேவை திணைக்களம் ஊடாக வாழைச்சேனை தொழில் பயிற்சி நிலையத்தில் உள்ள விசேட தேவையுடையவர்களுக்கான பயிற்சியில் திருகோணமலையைச் சேர்ந்த நால்வர் இணைக்கப்பட்டனர்.

திருகோணமலை மாவட்ட செயலக சமூக சேவை திணைக்கள மாவட்ட இணைப்பாளர் த.பிரணவன் இவர்களுக்கான வழிகாட்டலை வழங்கி உரிய நிலையத்தில் இணைப்பு செய்யப்பட்டுள்ளனர்.

தையல் பயிற்சி மற்றும் இலக்ரோனிக் ஆகிய இரு பிரிவுகளிலும் கற்பதற்காக திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு விசேடதேவையுடையவர்கள் இணைக்கப்பட்டனர். இவர்கள் நால்வரும் இரு வருடங்கள் தொழில்பயிற்சி கற்கை நெறியில் ஈடுபடவுள்ளனர். இவர்களை திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் மாவட்ட செயலகத்திலிருந்து வழியனுப்பி வைத்தனர்.

வெருகல், தம்பலகாமம், கந்தளாய், குச்சவெளி ஆகிய பிரதேச செயலகப் பகுதியிலிருந்து குறித்த நபர்கள் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**'ஒற்றுமையை சீர்குலைத்தவர்கள் நாங்களல்லர்' எனும் தலைப்பில் பெப்ரவரி 07ஆம் திகதி எமது பத்திரிகையில் வெளியான செய்தியில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், முன்னாள் எம்.பி. கலையரசன் என்று தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)**



உலக செய்திகள்

# பூகம்பத்தால் நிலைகுலைந்த துருக்கி - சிரியா

## • 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு
## • எங்கும் மரண ஓலம் - தோண்டத் தோண்ட வரும் சடலங்கள்

## இன்று 4ஆவது நாளாகவும் தொடரும் மீட்புப் பணிகள்

துருக்கி மற்றும் சிரியாவில் உலுக்கிய நிலநடுக்கத்தால் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இன்று நான்காவது நாளாகவும் மீட்புப் பணிகள் அசுரவேகத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், துருக்கி ஜனாதிபதி எர்டோகன் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவுக்கு மத்தியில் அங்கு இரவு பகலாக மீட்புப் பணிகள் நடந்துவரும் நிலையில், இன்னும் ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கியிருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

பூகம்பத்தால் உருக்குலைந்து கிடக்கும் துருக்கி மற்றும் சிரியாவில் நடைபெற்று வரும் மீட்புப் பணிகள் தொடர்பான காட்சிகள் மனதை உலுக்குவதாக உள்ளன. அடுத்தடுத்த நிலநடுக்கங்கள், எங்கும் மரண ஓலங்கள், தோண்டத் தோண்ட சடலங்கள் என கடந்த 4 நாட்களாக மயான பூமியாக காட்சியளிக்கின்றன துருக்கியும் சிரியாவும். ஒருபுறம் உயிரிழப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், கட்டிட இடிபாடுகளுக்கு இடையே சிக்கி உயிருக்குப் போராடிவரும் ஏராளமானவர்களை மீட்புக் குழுவினர் மீட்டு வருகின்றனர்.

துருக்கியில் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) 8,574இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 37,011 பேர் காயமடைந்துள்ளனர். 3,80,000 பேர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, சிரியாவில் 2,600இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

பூகம்பத்தால் உருக்குலைந்துள்ள துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளுக்கு 70இற்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகள் உதவிக்கரம் நீட்டியுள்ளன.

### துருக்கியில் 3 மாதகால அவசரகால நிலை பிரகடனம்

துருக்கி ஜனாதிபதி எர்டோகன், நிலநடுக்கத்தால் சிதைந்துபோயுள்ள 10 மாகாணங்களுக்கு 3 மாத கால அவசரகால நிலையை அறிவித்துள்ளார். முன்னதாக, பூகம்பத்தையடுத்து 7 நாட்களுக்கு தேசிய துக்க தினம்



அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இன்று நான்காவது நாளாகவும் மீட்புப் பணிகள் தொடர்கின்றன. கட்டட இடிபாடுகளிலிருந்து காயங்களுடன் ஏராளமானோர் மீட்கப்பட்டிருக்கும் அதேவேளை, உயிரிழந்தோரின் சடலங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

துருக்கியின் தென்மேற்கேயுள்ள காஸியண்டெப் நகரை மையமாகக்கொண்டு திங்கட்கிழமை (06) உள்ளூர்நேரப்படி அதிகாலை 4.17 மணியளவில் 7.8 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கிய நிலையில், பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர். சிலர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தவேளை நிலஅதிர்வு உணரப்பட்டதால் சுதாகரித்துக்கொண்டு வெளியே வருவதற்குள் பல கட்டடங்கள் சீட்டுக்கட்டுகளைப்போல் சரிந்து நிர்மூலமாகியுள்ளன.

நிலநடுக்கம் ஏற்பட்டதிலிருந்து சரியாக 10 நிமிடங்கள் இடைவெளியில் மற்றுமொரு சக்திவாய்ந்த நிலநடுக்கமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலநடுக்கம் 6.7 ரிச்டர் அளவில் பதிவாகியது. இதைத் தொடர்ந்து அன்று மதியம் மீண்டும் 7.5 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவானதுடன், 6.6 ரிச்டர் அளவிலும் நிலநடுக்கங்கள் பதிவாகின. இவ்வாறு திங்கட்கிழமை மட்டும் நான்குமுறை வலுவான நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

இதனால், துருக்கி மற்றும் அதன் அண்டைநாடான சிரியாவில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்றுவரும் நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளை இழந்த சுமார் 4 இலட்சத்துக்கும் அதிகமானோர் அரச முகாம்கள், ஹோட்டல்கள், பல்பொருள் அங்காடிகள், விளையாட்டு மைதானங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலநடுக்கத்தால் 450 கிலோ மீற்றர் சுற்றளவில் ஒரு கோடியே 35 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் துருக்கியின் 10 மாகாணங்களில் 3 மாத கால அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியின் ஹட்டே நகரம் தற்போது முற்றிலும் உருக்குலைந்து, சிதைந்து சின்னாபின்னமாகி காட்சியளிக்கும் கழுகுப் பார்வைக் காட்சிகள் வெளியாகியுள்ளன. அதே நகரில் இடிபாடுகளுக்கு நடுவே ஏதாவது கிடைக்குமா என ஏக்கத்துடன் பொதுமக்கள் சுற்றி வருகின்றனர்.

### அம்மாவைத் தேடும் சிறுமி

இந்நிலையில், சிரியாவின் அசாஸ் நகரில் பூகம்பத்தால் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. அந்த நகரில் பெரும்பாலான வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. கட்டிட இடிபாடுகளில் இருந்து நேற்றுமுன்தினம் 7 வயது சிறுமி உயிருடன் மீட்கப்பட்டார். சிறுமியின் தாய், தந்தை, உறவினர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர்.



''என் அம்மா எங்கே..'' என்று சிறுமி தேம்பி தேம்பி அழுதுகொண்டே இருக்கிறாள். அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் மீட்புப் படை வீரர்கள் தவித்து வருகின்றனர்.

சிரியாவை சேர்ந்த அரச அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், ''உள்நாட்டுப் போரால் சிரியா மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில் இயற்கை பேரிடரும் எங்களை தாக்கியிருக்கிறது. பூகம்பம் பாதித்த பல கிராமங்களுக்கு எங்களால் செல்ல முடியவில்லை. அந்த கிராமங்களின் நிலைமை என்ன என்பது தெரியவில்லை'' என்று தெரிவித்தார்.

### பாதிப்பை அறியாது விளையாடும் சிறுவர்கள்

இது ஒருபுறம் இருக்க, நிலநடுக்கத்தின் எந்தப் பாதிப்பையும் அறியாமல் இடிபாடுகளில் கிடைத்த பொருட்களைக்கொண்டு சிறுவர்கள் விளையாடும் காட்சிகள் நெஞ்சை உலுக்குவதாக உள்ளன.

காஸியண்டெப் மாகாணத்தில் இடிந்த கட்டிடங்களுக்கு இடையே சிக்கியிருந்த முதியவரை மீட்ட மீட்புக்குழுவினர் அவரை அம்பியூலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். ஒருவரை உயிருடன் மீட்டதால் உணச்சிவசப்பட்ட மீட்புக் குழுவினரும், பொதுமக்களும் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

### இடிபாடுகளிடையே தூங்கிக்கொண்டிருந்த சிறுவன்

தெற்கு துருக்கியில் நிலநடுக்க ஏற்பட்ட 24 மணி நேரத்துக்குப் பின் அந்த இடிபாடுகளுக்கு இடையே சிறுவன் ஒருவன் தூங்கிக்கொண்டிருந்ததை கண்ட மீட்புக் குழுவினர் அவனை தட்டி எழுப்பினர். அந்த சூழலை புரியாத சிறுவன் என்ன நடக்கிறது எனக் கேட்டதும் காலை வணக்கம் கூறிய வீரர்கள் அவனை மீட்டனர்.

வடமேற்கு சிரியாவில் தொப்புள்கொடி தாயுடன் பிணைக்கப்பட்ட நிலையில் குழந்தை ஒன்றை கண்டனர். இடிபாடுகளில் சிக்கி குழந்தையை பிரசவித்த பெண் உயிரிழந்த நிலையில், உயிருடன் இருந்த குழந்தைக்கு தொப்புள்கொடியை அகற்றிய மீட்புப் படையினர் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

ஹட்டேவில் இடிபாடுகளில் சிக்கியிருந்த குழந்தையொன்று பல மணிநேரத்துக்கு பின்னர் கட்டட இடிபாடுகளில் சிக்கியிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், அக்குழந்தையை உடனடியாக இடிபாடுகளிலிருந்து மீட்க முடியவில்லை. இக்குழந்தை பெயர் முஹம்மட் என தெரிவிக்கப்படுகின்ற நிலையில், மீட்புப் படையினர் வரும்வரை குழந்தைக்கு பிளாஸ்ரிக் போத்தலின் மூடியில் தண்ணீர் பருக்குகின்றனர். பல மணிநேரத்துக்கு பின்னர் தாகம் தீர்ந்ததால் அந்தக் குழந்தையின் முகத்தில் நன்றியுணர்வுடன் கூடிய புன்னகை மலர்கின்றது. சுமார் 45 மணி நேரத்தின் பின்னர் கட்டட இடிபாடுகளில் இருந்து முஹம்மட் மீட்கப்பட்டுள்ளான். இதுதொடர்பான காணொளி காட்சிகள் இணையத்தில் வைரலாகியுள்ளன.

காரமனமாரஸ் நகரில் வீடுகளை முற்றிலும் இழந்தவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து தங்குவதற்கு இடமின்றி வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் வாங்க வரிசையில் காத்திருக்கின்றனர்.

ஹடாய் மற்றும் காஸியண்டெப் மாகாணங்களில் இரவு முழுக்க மக்கள் விளையாட்டுக் கூடங்கள், ஷொப்பிங் மோல்கள், பள்ளிவாசல்களில் தங்கியுள்ளனர். நிலநடுக்கம் பாதித்த பகுதிகளில் மருத்துவக் குழுவினர் இரவு பகலாக சிகிச்சையளித்து வருகின்றனர். அங்குள்ள மருத்துவமனைகள் தொடர்ந்து காயமடைந்தவர்களால் நிரம்பிவழிகின்றன.

சிரியாவில் 12 ஆண்டுகால உள்நாட்டுப் போரால் அகதிகளாக புலம்பெயர்ந்த மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, கிளர்ச்சிப் படை கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பல வீடுகள் இடிந்து மக்களில் பலர் பலியாகியுள்ளதாகவும், உரிய மீட்புப் பணி இல்லாமல் பல உயிர்களைக் காப்பாற்ற முடியாமல் போவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சிரிய கிளர்ச்சியாளர்களால் தடைப்படும் நிவாரணப் பணி

சிரியாவின் வடக்கு, கிழக்கு பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சிரியா அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் ஓரளவுக்கு மீட்புப் பணிகள் நடைபெறுகின்றன. ஆனால், கிளர்ச்சிப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகள் பேரழிவிலிருந்து மீள முடியாமல் தவித்து வருகின்றன. கிளர்ச்சியாளர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் படையினரையும், வெளிநாட்டு மீட்புப் பணியாளர்களை அனுமதிக்க மறுத்துள்ளனர்.

சிரியாவின் வரலாற்று நகரமான இட்லிப் ஏற்கனவே உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் முற்றிலும் நிலைகுலைந்து போயுள்ளது. இடிபாடுகளில் சிக்கி 2 நாட்களாக உயிருக்குப் போராடிய சிறிய குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது.

துருக்கி மற்றும் சிரியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க நிவாரண உதவிகள் குவிந்து வருகின்றன. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஐரோப்பிய நாடுகள், அரபு நாடுகள் இராணுவ வீரர்களையும், மருத்துவக் குழுக்களையும் அனுப்பிவைத்துள்ளன.

துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்க பாதிப்பு குறித்த புகைப்படங்கள் பெரும் சோகத்தை ஏற்படுத்தி வருகின்றன.

துருக்கியின் காஸியண்டெப், கஹ்ராமன்மாராஸ், ஹடாய், ஒஸ்மானியே, அதியமான், மாலத்யா, சன்லியுர்ஃபா, அதானா, தியர்பாகிர் மற்றும் கிலிஸ் ஆகிய துருக்கி நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த 10 நகரங்கள் மிக மோசமான பாதிப்பை அடைந்துள்ளன.

### துருக்கியின் ரியல் ஹீரோ

இதேபோன்று மற்றுமொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. கட்டட இடிபாடுகளின் கீழ் சிறுமியொருவர் சிக்கியபடி இருந்துள்ளார். அவருக்கு மேலே பெரிய சுவரொன்று வீழ்ந்திருந்த நிலையில், அருகிலேயே அந்தச் சிறுமியின் தம்பியும் இருந்துள்ளார். இருவர் மீதும் அந்தச் சுவர் விழுந்தபடி கிடந்திருக்கிறது.

அந்தச் சிறுமியை அதிகாரிகள் பார்த்தபோது அவர் தனது தம்பியின் தலையின் மேல் கை வைத்தபடி பாதுகாப்பாக இருந்துள்ளார். தனது தம்பியின் தலையில் எதுவும் விழுந்துவிடாதபடி பாதுகாப்பாக இருந்துள்ளார். தன்னுடைய உயிர் போனாலும் கூட பரவாயில்லை என்று அந்தச் சிறுமி தனது தம்பிக்கு கேடயமாக இருந்துள்ளார். சுமார் 17 மணிநேரம் அந்தச் சிறுமி தனது தம்பிக்கு இப்படி பாதுகாப்பு அரணாக இருந்துள்ளார். மீட்புப் பணியினர் அவர்களை மீட்க வந்தபோது அந்தச் சிறுமி அவர்களை சிரித்தபடி வரவேற்றுள்ளார்.

அந்தச் சிறுமிக்கு அதிகபட்சம் 5 வயதுதான் இருக்கும். அவரின் தம்பிக்கு 3-4 வயது இருக்கும். இருந்தாலும் பக்குவமடைந்தவரை போல செயல்பட்டு, தனது உயிருக்கு அஞ்சாமல் தனது தம்பியை பொறுப்பாக காப்பாற்றியுள்ளார். அந்தச் சிறுமியை தற்போது துருக்கி ரியல் ஹீரோ என்று கூறி கொண்டாடி வருகிறது. அந்தச் சிறுமி, அவரின் தம்பி இருவரும் நேற்று பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். அவர்களின் வீடியோ மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. ஐ.நாவில் பணியாற்றும் மீட்புப் படையினர் பலர் இந்த வீடியோவை பகிர்ந்து, ''இது போன்ற பொசிட்டிவ் விடயங்களையும் பகிருங்கள். இது மிகப்பெரிய நம்பிக்கையை கொடுக்கிறது'' என்று தெரிவித்துள்ளனர்.

### தந்தையின் கையை பிடித்தபடி உயிரிழந்த சிறுமி

இந்நிலையில், கஹ்ராமன்மராஸ் நகரில் கட்டட இடிபாடுகளுக்கு அடியில் சிக்கிய 15 வயது சிறுமி, வெளியில் அமர்ந்திருக்கும் தந்தையின் கையை பிடித்தபடி உயிரிழந்த



காட்சி, காண்போர் கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றது. இந்த நிலநடுக்கம் மிகப்பெரிய பேரழிவு என உயிர்தப்பிய மக்கள் கண்ணீர் விடுகின்றனர்.

There is no barrier for

LOVE

We invite all our readers to send a photo with your loved one to be publish in **the daily Morning** pictorial page on 14th February Valentine's Day. WhatsApp the photos. with your Name, Address, Both contact numbers & Both ID card copies

The most loveable couples, will receive special gifts

the daily morning

WhatsApp No : 076 2568348